Reigstered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily     தேசிய தினசரி

போன்: 389

மலர் 4   யாழ்ப்பாணம்   சுபகிருது   சித்திரை   துல்கஃதா 15   (21-4-62)   சனிக்கிழமை   இதழ் 69

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# சைவமாணவர் சங்கடம்

## சமயபாட திட்டத்தை திருத்தியமைக்க கோரிக்கை

அச்சுவேலி, வெள்ளி

தற்போதைய சைவசமய பாடத்திட்டம் மாணவர்களுக்கு மிகவும் கஷ்டமாய் இருக்கிறதென்றும், திருவருட்பயன், இந்து சமயபாடம் என்ற நூல்களைப் படித்து விளங்கிக்கொள்ளவே முடிவதில்லை என்றும் அச்சுவேலியைச் சேர்ந்த இ. திருநாவுக்கரசு என்ற மாணவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். சைவசமய பாடத்தில் கஷ்டமான பகுதிகளை நீக்கி பாடத்திட்டத்தை மாற்ற வேண்டுமெனவும் மாணவர்கள் சார்பாக அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அவர் தமது கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

"இப்போது இருக்கும் சமய பாடத்திட்டத்தின்படி எங்களால் படிக்க இயலாது. 'திருவருட் பயன்' என்ற நூல் படிப்பதற்கே குறைந்தது மூன்று வருடம் வேண்டும். 'இந்து சமய பாடம்' என்னும் புத்தகத்தில் உள்ள வேதம், சம்கிதைகள், பிரமாணங்கள், உபநிடதங்கள், தர்மசாத்திரங்கள், புராணங்கள் ஆகமங்கள் இவைகளொன்றும் எங்களால் படிக்க இயலாது. இந்தப்புத்தகத்தில் உள்ள திருவாசகம், போற்றித்திருவகல் தேவாரங்களுக்கு கருத்து இவைகளும் எங்களால் படிக்க இயலாது. வேத ஆகமங்களில் உள்ள கௌஷீதகீயம், கௌதமம், முதலிய சொற்களை எங்களால் மனதில் வைத்துக்கொள்ள இயலாது. இவைகளை மனதில் வைத்து எழுதுவது பரீட்சைக்கு என்றால் முடியாத காரியம் ஆகும். இக்காரணங்களால் தான் மாணவர்கள் பரீட்சையில் சைவசமயபாடத்திற்கு புத்தகம் வைத்து பார்த்து எழுத முற்படுகிறார்கள். இவைகளை படிப்பதென்றால் மரணவேதனையிலும் பார்க்க கொடிய துன்பத்தை அனுபவிக்க வேண்டி இருக்கிறது. எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடையவில்லை என்று மாணவர்கள் தற்கொலை செய்வது இந்த சமயபாடத்திட்டத்தினலே ஆகும்!

முன்பு மாணவர்கள் சைவ சமயத்தை மிகவும் ஆவலோடு படித்தார்கள்.

கிறிஸ்தவ சமயம் படிப்பதற்கு ஒருவித கஷ்டமும் இல்லை அதேபோல் சைவசமய பாடத்தில் முன்பு கூறிய கஷ்டமான பகுதிகளை நீக்கி இந்தப்பாடத்திட்டத்தை உடனடியாக மாற்றவேண்டும். வருகிற மார்கழி மாதம் எஸ். எஸ். ஸி. பரீட்சை, சைவ சமயபாடம் புதிய திட்டத்தின்படி பரீட்சை எழுத உத்தரவு பிறப்பிக்கும்படி சைவ சமய மாணவர்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

## அமெரிக்காவுக்கு ரஷ்ய-வான்வெளி வீரர் விஜயம்

வாஷிங்டன், ஏப்ரல் 20

சோவியத் வானவெளி வீரர் டிட்டாவ், இம்மாதம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்வார். அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும் முதலாவது ரஷ்ய வானவெளி வீரர் இவர்தான்.

22 – 4 – 62

ஈழநாடு ஞாயிறு இதழில்

★ விழிப்பு (சிறுகதை)
'செங்கை ஆழியான்'

★ இராஜதந்திரப் பேச்சுவார்த்தை
பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

★ அன்பின் ஆற்றல் (இலக்கியம்)
வித்துவான் பொன். முத்துக்குமாரன்

★ தரணியெல்லாம் தமிழ்
ஆ. தேவராசன்

'கூலை அரங்கம்'   உலகமேடை

மற்றும் பல சுவையான அம்சங்கள்.

## பொருட்களின் தராதரம் கணிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

உள்நாட்டுப் பொருட்கள் அனைத்தையும் தராதரம் கணிக்கும்பொருட்டு அரசாங்க தராதரப் பகுதி ஒன்று நிறுவப்படும். பொருட்களின் தரம் உயர்தரமாயிருக்கும்படி பார்த்துக்கொள்வதற்கே இந்த ஏற்பாடு என்றும் உற்பத்திப் பொருட்களின் சாம்பிள்கள் இப்பகுதிக்கு அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்ட.

## கலோஞ்சிக்கு 5 வருடசிறை

லியப்போல்ட்வில்லி, ஏப். 20

காங்கோவின், தென்கஸாய் மாகாணத் தலைவரான அல்பர்ட்கலோஞ்சிக்கு 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை எதிர்த்து அவர் அப்பீல் செய்துகொண்டிருக்கிறார்.

## மைத்திரிபால-என்.எம். ரோம் சென்றனர்

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்காவும், டாக்டர் என். எம். பெரேராவும் இன்று ரோமாபுரிக்குப் பயணமானர்கள். அங்கு நடைபெறும் சர்வதேச பாராளுமன்றக் கூட்டத்தில் இவர்கள் கலந்துகொள்வார்கள். ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் அழைப்பிற் கிணங்க திரு. மைத்திரிபால சேனநாயக்கா அங்கும் செல்வார். அடுத்த மாதம் 10-ம் திகதி மந்திரி இலங்கை திரும்புவார்.

## ஐ. நா. மீது அடுலா குற்றச்சாட்டு

லியப்போல்ட்விலி, ஏப்ரல் 20

கடாங்கா அதிபர் ஷோம்பே எலிஸபெத்வில் திரும்பவிருந்த சமயத்தில் ஐ. நா. படைகள் அத்துமீறி நடந்துகொண்டதாயும், இது தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணியிருப்பதாயும் காங்கோ அதிபர் திரு. அடுலா குற்றஞ்சாட்டியிருக்கிறார். இதற்கிடையில் காங்கோ பற்றித் தம்முடன் ஆலோசனை செய்யவருமாறு அங்குள்ள ஐ. நா. அதிகாரிகளை ஐ. நா. பிரதம காரியதரிசி திரு. யுதாண்ட அழைத்திருக்கிறார்.

## செய்திப் படங்களை கட்டாயம் காட்டவேண்டும்

### தியேட்டர்களை வற்புறுத்த சட்டம் வருகிறது

கொழும்பு, வெள்ளி

அரசாங்கம் தயாரிக்கும் செய்திப் படங்களையும், துண்டுப்படங்களையும் தியேட்டர்கள் பெற்று அவைகளைத் திரையிடுவதற்கேற்ற முறையில் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்படங்களுக்கு தியேட்டர்கள்பணம் கொடுக்க வேண்டும்.

தியேட்டர்கள் இவைகளைத் திரையிட மறுத்து வருவதாக தகவல்டைரக்டர் திரு. டபிள்யூ. எப். பெர்னண்டோ தயாரித்துள்ள ஒரு குறிப்பில் தெரிவித்துள்ளார். அரசாங்கம் தயாரிக்கும் செய்திப் படங்களையும், தகவல் இலாகா மூலம் வெளியிடும் இதர படங்களையும் காட்ட தியேட்டர்கள் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கவேண்டும் என புதுச் சட்டம் வற்புறுத்தும்.

இந்தியாவில் படம் ஓடும் நேரத்தில் ஆறில் ஒரு பங்கு நேரம் செய்திப்படம் காட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாயும், சட்டம் அங்கு இதற்கேற்ப வழிசெய்திருப்பதாயும் தகவல் டைரக்டரின் குறிப்பு கூறுகிறது.

## இறக்குமதி தடை மீறப்படும் தந்திரம்

### தீவிர கண்காணிப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

கட்டுப்பாட்டை மீறி ரேடியோக்களையும், மோட்டார் சைக்கிள்களையும் இறக்குமதி செய்த அனேகருக்கு சுங்க அதிகாரிகளால் பெரும் அபராதங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

மோட்டார்சைக்கிள் பாகங்களை வரவழைத்து இங்கு அவைகளை மோட்டார் சைக்கிள்களாகப் பொருத்திய ஒரு வர்த்தகருக்கு ரூ. 17500 அபராதம் விதிக்கப்பட்டது.

உதிரிப் பாகங்கள் என்று கூறி முழு மோட்டார் சைக்கிளை உருவாக்குவதற்கான வகையில் இவைகள் இறக்குமதிசெய்யப்பட்டதாய் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறக்குமதித்தடை இவ்வாறு மீறப்படுவதாயும், மோட்டார் சைக்கிள்கள், ரேடியோக்கள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் இறக்குமதிவிஷயத்தில் இனி தீவிர கண்காணிப்பு இருக்குமென்றும் கூறப்படுகிறது.

## கண்களைப் பறிகொடுத்தார்!

மிரிகாமம், வெள்ளி

கலகமுவவைச் சேர்ந்த 22 வயதுள்ள ஒருவர் பட்டாசு கொளுத்திய சமயம், தமது கண்களைப் பறிகொடுத்துவிட்டார்!

பட்டாசு ஒன்றைக் கொழுத்துவதற்காக அவர் குனிந்து நெருப்புவைத்தசமயம், எதிர்பாராதவிதமாக பட்டாசு வெடித்து, அவரின் கண்களைப் பறித்துக்கொண்டது.

வட்டுபிட்டிவெல ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## காத்திருந்தும் பலனில்லை!

தெரணியாகலை வெள்ளி

தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரமொன்றை அனுப்பி வைக்கும்படி கேகாலை மாவட்ட பிறப்பு, இறப்பு றெஜிஸ்டாருக்கு மனுச்செய்த ஒருவர், 16 மாத காலமாக காத்திருந்தும்; அவருக்கு இன்னும் அத்தாட்சிப் பத்திரம் கிடைக்கவில்லை!

தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரமொன்றை அனுப்பி வைக்கும்படி கடந்த வருடம் ஜனவரி மாதம் அவர் மனுச் செய்திருந்தாரென்றும், ஆனல் இதுவரை கச்சேரிக்கு இது சம்பந்தமாகப் பல கடிதங்கள் எழுதியும் பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தெரியவருகிறது.

## 4வது எஃகு ஆலைபற்றி

### திரு. சுப்ரமண்யம்

சென்னை, ஏப்ரல் 20

ரூ 20 கோடி செலவில் 4-வது எஃகு ஆலை ஒன்று பொக்காரோவில் நிறுவப்படும் என மத்திய கனரகத்தொழில் மந்திரி திரு. ஸி. சுப்ரமண்யம் அறிவித்தார். இந்த ஆலை வருடம் 10 லட்சம் டன் எஃகு உற்பத்திசெய்யுமெனவும் அவர் அறிவித்தார். நெய்வேலி லிக்னைட்டைக் கொண்டு இரும்புக் கனிகளைக் கொண்டு இரும்பு எஃகு ஆலை ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

# இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருதுஆண்டு சித்திரைத் திங்கள் 8ம் தேதி சனிக்கிழமை (21-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, ஜுல்கஃதா மாதம் 15ம் பிறை.

இன்று பிரதமை காலை7-36 வரை. பின்னர் துதியை காலை 8-50வரைசுவாதி. பின்னர்விசாகம். அமிர்த சித்தயோகம். இராகுகாலம் 9-01முதல்10-51 வரை.

இன்று அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால், சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

சுவாதி, விசாகம் - இன்று இவர்களுக்கு தொழிற் சிறப்பு, கீர்த்தி, சமுதாய தொண்டும். மதிப்பும், செலவு அதிகரிப்பு ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு அனுவசிய சச்சரவு. தயக்கம், தொழில்மந்தம், வாக்குவன்மையால் தொழிலை உயர்த்தல், முயற்சிக்குப்பலன் ஆதியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு எதிரிகளால் இடர், கஷ்டசூழ்நிலை, வித்தை உயர்ச்சி, வாக்குவெற்றி,பெண்களால்இடர் ஆதியன காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு குடும்ப சிந்தனை, தொழில் ஊக்கம், பெரியோர் உதவி, பணவரவு, தொழிற்சிறப்புஆதியனகாணப்படுகின்றன.

கடகம்: (புனர்பூசம்4ம்பாதம், பூசம், ஆயிலியம்முடிய) இன்று இவர்களுக்கு பெண்களால் தொல்லை, பணமுடை, மனத்துணிவு, உழைப்பு, பழைய கடன்வரவு ஆதியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு பிரயாண நெருக்கடி, வீண்சந்தேகம், கவலைகள், பகை சமாதானமடைதல், பணச்செலவு ஆதியன காணப்படுகின்றன.

கன்னி, (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரை முடிய) இன்று இவர்களுக்குப்போசனசுகம்,பெண்களதொல்லை,செலவுஅதிகம், புதிய புதிய சிந்தனைகள், கடும்உழைப்பு, உழைப்புக்காதாயம் ஆதியன கபணப்படுகின்றன.

துலாம்:(சித்திரைபின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு தொழில் அசிரத்தை, ஆதாயக் குறைவு, பணக்கஷ்டம், சமுதாயமதிப்பு, தொழில்நலம்,செலவு அதிகம் ஆதியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இன்று இவர்களுக்கு கடும் யோசனை, தெய்வ வழிபாடு, தருமச்செலவு, நல்லோர் ஆதரவு, சமுதாய மதிப்பு, சந்தோஷம், குடும்பசுகம் ஆதியன காணப்படுகின்றன.

தனு: மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு நீசர் தொடர்பால் ஏமாற்றம்,கவலை, பகைநிவர்த்தி, குழந்தைகளால் சுகம், பிதாவழி சிந்தனை ஆதியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம்பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரைமுடிய) இன்று இவர்களுக்கு தருமச் செலவு, சமயோசிதபுத்தி, வாக்குவெற்றி, தொழிற் சிறப்பு, பணவரவு, கடன்முடை நீக்கம் ஆதியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதிமுன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு குடும்பசிரமம், பணமுடை, கடன்படல், மனத்திற்கு நிம்மதி தரும்செய்தி,தாயாதிகள் கரைச்சல் ஆதியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு குடும்ப சுகம், பணவரவு, பிதுருவழி உதவி,நிம்மதி, குழந்தைகளால் நலம், சந்தோஷச் செய்தி,சுகம் ஆதியன காணப்படுகின்றன.

## 22-4-62

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 9ந் தேதி ஞாயிற்றுக் கிழமை (22-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, ஜுல்கஃதா மாதம் 16ம்பிறை.

இன்று துதியை காலை 8-17 வரை, பின்னர் திருதியை. பகல் 10-07 வரை விசாகம். அதன்பின்னர் அனுஷம். மரணயோகம். இராகுகாலம் 4-31 முதல் 6-01வரை.

இன்று உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

## இராசிப்பலன்

விசாகம்-அனுஷம்:- இன்று இவர்களுக்கு பிரயாண சுகம், தொழில் தாமதம், ஊழியராற் கஷ்டம், நண்பர்பகை. குடும்பச்செலவு ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு கடன் வரவு, நற்பொழுது கழிதல், அதிக ஆசையால் முயற்சி ஏமாற்றம், தெய்வ வழிபாடு, தருமச்செலவு ஆதியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு சுபகருமவெற்றி, மதிப்புயர்ச்சி, நீசர் தலையீட்டால் பொருள்நட்டம், நண்பர், உறவினர் உதவி ஆதியன காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு குடும்ப சுகம், ஊழியர் உதவி, செய்தொழில்வெற்றி, மதிப்பு, பணவரவு, இன்பசிந்தனை ஆதியன காணப்படுகின்றன.

கடகம்:(புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய)இன்று இவர்களுக்கு தொழிற்சிறப்பு, பெண்கள தொல்லை, உண்டிவெறுப்பு, பிதுருவழி நன்மை, செய்தொழில் இலாபம், சுகம் ஆதியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு வாழ்க்கைச் சிறப்பு, கலைப்பயிற்சி, ஊழியரால் கஷ்டம், கடும் உழைப்பு, மனத்தில் நிம்மதி, பணமுடை நீக்கம் ஆதியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம்பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரைமுடிய) இன்று இவர்களுக்கு சுப பொழுதுபோக்கு, ஆதாயம், குடும்பசுகம், நல்லோர்நட்பு, பிரயாணம், அலைச்சலால் அசதி, போசன வெறுப்பு, ஆதியன காணப்படுகின்றன.

துலாம்:(சித்திரைபின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஆதாயம்,பிரயாணம், சுகம், பொருள்வரவு, ஊழியரால் தொழில் தாமதம், பெரியோர் நட்பு ஆதியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இன்று இவர்களுக்கு தொழிற்றுமதம், நண்பர்உதவி, சுப யோசனைகள், பணவரவு, வாக்கு வன்மையால் வெற்றி, வித்தைச்சிறப்புஆதியன காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம் உத்தராடம் 1ம்பாதம்முடிய) இன்று இவர்களுக்கு கற்றோர் தொடர்பு, கலைப்பயிற்சி, பணவரவு, நண்பர் சேர்க்கை, வாக்கு வெற்றி, சுகம் ஆதியனகாணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு வழக்கு வெற்றி, மதிப்புயர்ச்சி,தொழில்வெற்றி, கடன் நிவர்த்தி, குடும்ப சுகம், ஊழியர் உதவி ஆதியன காணப்படுகின்றன.

கும்பம்: (அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு தொழில் நன்மை, இலாபம், குடும்ப சுகம், பண வரவு ஆதியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு சந்ததி நன்மை, பெரியோர் கோபம், முன்யோசனையற்ற நடத்தை, வாக்குக் கஷ்டம், வர்த்தக இலாபம், வித்தை அபிவிருத்தி ஆதியன காணப்படுகின்றன.

## தேவை

வலி வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஒரு லிகிதர் தேவை. கீழ்க்காணும் தராதரமுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

கணக்கில் அல்லது கணிதத்தில் விசேட சித்தியடைந்தவர்களும் ஆங்கிலத்தில் சித்தியுடனும் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரமுடையவரும், 23 — 30 வயதுக்குமிடையிலுள்ளவரும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பப் பத்திரத்துடன் கல்வித் தராதரப் பத்திரமும், சமீபத்தில் பெற்ற 3 நற்சாட்சிப்பத்திரமும், வயதுச் சான்றுப் பத்திரமும் அனுப்பப்பட வேண்டும்.

ஐக்கியகலாசாலையில் பயிற்சி பெற்றோருக்கு விசேட சலுகை காண்பிக்கப்படும்.

சம்பளம்:

60-00 — 110-00 / 10×5-00

110-00 — 170-00 / 8×7-50

இத்துடன் வாழ்க்கைப்படியும் கொடுக்கப்படும். பிணை ரூபாய் 300-00 கட்டவேண்டும். விண்ணப்பங்கள் 30-4-62க்குப் பிந்தாமல்காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும்.

காரியதரிசி,
வலி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
தெல்லிப்பழை.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இலும்.

வைத்தியர் பரிபூரணநந்தா.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## தம்பியைக் கொன்றவருக்கு மரணதண்டனை

களுத்துறை, வெள்ளி

அமரத்துங்கா ஆராச்சிகே மொனிஸ் சிங்கோவுக்கு களுத்துறை அசைஸ் நீதிமன்றக் கமிஷனர் திரு. ஏர்ல் விஜேவர்த்தன மரணதண்டனை விதித்துள்ளார்.

மே 26-ந் திகதியன்று மொனிஸ் சிங்கோ மரணதண்டனைக்குள்ளாவார். எதிரி தனது தம்பியாரான அமரத்துங்கா ஆராச்சிகே எட்வினை, கடந்த ஏப்ரலில் கத்தியால் வெட்டிக் கொன்றாராம்.

ஜூரிகள் எதிரியைக் குற்றவாளிஎன ஏகமனதாகக் கூறினர். அசைஸ்கமிஷனர்எதிரிக்கு மரணதண்டனை விதித்தார்.

## சக்ளா ராஜினமா

புதுடில்லி, ஏப். 20

பிரிட்டனில் இந்தியாவின் புதியஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எம். ஸி. சக்ளா தமது ராஜ்ய சபை ஸ்தானத்தை ராஜினமாச் செய்து விட்டார்.




ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டப்போதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே நிளமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு பட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ரான்ட்ஸ்

எஸன்ஸ் ஓப் சிக்கன்

# “பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் ஆபத்து”

## கல்வி மந்திரி கூறுகிறார்
## இலங்கை ஒரு கோழிக்கூடு என வர்ணிப்பு

கொழும்பு, வெள்ளி

“வகுப்புவாதம் மிகவும் மோசமானது. சிறுபான்மையினரின் வகுப்புவாதம் புரிந்துகொள்ளக்கூடியது. பெரும்பான்மையினரின் வகுப்புவாதம்! —அந்த ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்” என்று கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டோக்கியோவில் நடைபெற்ற ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாசார மகாநாட்டில் கலந்துகொண்ட பின் சென்ற செவ்வாய்க்கிழமை இலங்கை திரும்பிய கல்வி மந்திரி தமது வெளிநாட்டுப் பயணம்பற்றிப் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் மேலும் கூறியதாவது:-

மொழி, மதம், கலாசாரம் என்ற விஷயங்களில் நாம் அதிகம் கவலைப்படுகிறோம். அவைகள் அவசியம்தான். ஆனல் முதலில் தேவையானவைகளில் முதலில் கவனம் செலுத்தவேண்டும். முதலில் கவனம் செலுத்தவேண்டியவைகளில் நாம் கவனம் செலுத்தத் தவறியதலைதான், எங்களுக்குப் பின்னர் சுதந்திரமடைந்த நாடுகள் அடையாளம் தெரியாத வகையில் முன்னேற்றமடைந்திருக்க நாம் மட்டும் அந்த நிலையில் இருக்கிறோம்.”

“எங்கள் சுதந்திரத்தை நாங்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை. முன்னேற்றமடைந்துள்ள இதர நாடுகளுக்கு ஒருவர் சென்றுவிட்டு இலங்கைக்குத் திரும்பிவந்ததும் கோழிக் கூட்டுக்கு வந்துவிட்ட உணர்வே அவருக்கு ஏற்படும்” என்று கல்வி மந்திரி கூறினர்.

### “மலாயாவுடன் ஒப்பிடுகையில்....”

“இலங்கையை ஜப்பானுடன் ஒப்பிட்டுப் பார்க்க நான் விரும்பவில்லை. ஆனல் நான்கு வருடங்களுக்கு முன் சுதந்திரமடைந்த மலாயாவுடன் பதினெருவருடங்களுக்குமுன் சுதந்திரமடைந்த இலங்கையை நாம் நிச்சயம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். நான்கு வருடகாலத்தில் மலாயா குறிப்பிடக்கூடிய அளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளது. பதினெரு வருட காலத்தில் இலங்கை எவ்வித முன்னேற்றமும் அடையத் தவறிவிட்டது” என்று மந்திரி மாமூத் கூறினர். மலாயாவின் முன்னேற்றம் பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

மலாயாவில் ஒவ்வொரு மந்திரியும் உற்சாகமும் ஆர்வமும் உள்ளவராக இருக்கிறார். அவருக்கு சகல ஆதரவும ஒத்துழைப்பும் அளிக்கபபடுகிறது. மந்திரிமளர் வாக்காளரால் தொந்தரவுக்குள்ளாவதில்லை. பார்லிமெண்ட் அங்கத்தவர்கள்கூட மந்திரிமாரைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு குழுவினர். அவர்களுக்கு தனிப்பட்ட கோபாதாபம், பொருமை கிடையாது.

ஆனல் இலங்கையில், ஒவ்வொருவரும் பிரதம மந்திரியாகவர ஆசைப்படுகின்றனர். பார்லிமெண்டில் தமது ஸ்தானத்தையும் அதிகாரத்தையுமே அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். நாட்டின் முன்னேற்றத்துக்கோ கைத்தொழிலுக்கோ அவர்கள் எதுவும் செய்யவில்லை ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டே வாழ்க்கை நடத்த முடியாது. ஜனநாயகம் சாப்பிடக்கூடிய ஒரு பொருளல்ல.

### இலவசக்கல்வி பற்றிய கருத்து

இலங்கையின் இலவசக் கல்வித் திட்டம்பற்றி மந்திரி பதியுதீன் மாமூத் பின்வருமாறு கூறினர்:

கைத்தொழில் துறைகளிலிருந்து சர்வகலாசாலை வரை இலவசக் கல்வி அளிப்பது பற்றி நான் சென்ற நாடுகளிலுள்ள கல்விமான்கள் பெரும் ஆச்சரியம் தெரிவித்தனர். மணிலா, மலாயா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இலவசக் கல்விமுறை இல்லை.

இலவசக் கல்விமுறையை நான் எதிர்க்கவில்லை. ஆனல் அதுபற்றி எனது சொந்த அபிப்பிராயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். கைத்தொழில் வளமில்லாத இலவசக்கல்வியால் சர்வகலாசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு வெளியே வருபவர்களுக்கு வேலை கிடைப்பது ஒரு பிரச்சினையாகுமென்று கல்விமான்கள் தெரிவித்தனர்.

இந்த வருடம் சர்வகலாசாலையிலிருந்து வெளிவரவிருக்கும் 500 பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் கஷ்டம் கல்வி இலாகாவை எதிர்நோக்கியுள்ளது. எல்லாரும் ஆசிரியர்களாக முடியாது. அவர்களை நாங்கள் என்ன செய்வது?

வேலையில்லாத் திண்டாட்டம் கம்யூனிஸத்துக்கு வழி வகுக்கும் என்று கல்விமான்கள் கருத்துத் தெரிவித்தனர். இலவசக்கல்வி அவசியம்தான் ஆனல் மாணவர்களை வழிகாட்டக்கூடிய வசதிகளிருக்க வேண்டும். அது இங்கில்லை.

இலங்கையிலுள்ள நாங்கள் தனிப்பட்ட விஷயங்களில்தான் கவனம் செலுத்துகிறோம். இதன் விளைவாக பொருளாதாரம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் அதை இங்கு எதிர்க்கட்சி எதிர்க்கிறது. இதர நாடுகளில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கின்றன.

## கப்பல் மோதி படகு உடைந்தது

வெலிகம, வெள்ளி

பம்பாயிலிருந்து இங்கு வந்த கப்பலொன்று, கடலில் நின்ற மீன்பிடிப் படகொன்றில் மோதியதால் படகு சுக்கு நூறு யிற்று. கப்பரத்தோட்டத்தைச் சேர்ந்த மூவர் இந்த மீன்பிடிப் படகில் சென்றுகொண்டிருந்தார்கள். படகு நொருங்கியதால் இவர்கள் கடலில் வீசப்பட்டார்கள்

இரண்டு நவீன படகுகள் உடனடியாகவே சென்று அவர்களைக் காப்பாற்றின. கொழும்பு துறைமுகத்துக்கு பம்பாய்க் கப்பலிலேயே அவர்கள் கொண்டுவரப்பட்டனர். இவர்களிருவருக்குப் பலத்த காயமேற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

---

## ஷோம்பே திரும்பினர்

எலிஸபெத்வில்லி, ஏப்ரல் 20

காங்கோ ராணுவத்தினரால் லியப்போல்ட் வில்லியில் தடுத்து நிறுத்தப்பட்ட கடாங்கா அதிபர் திரு. ஷோம்பே 16 மணிநேரம் லியப்போல்ட்வில்லியில் ஐ. நா. பாதுகாப்பிலிருந்த பின் எலிஸபெத்வில்லி வந்து சேர்ந்தார்.

காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு. தாண்ட்டென் ஆலோசனை நடத்துவதற்காக நியுயோர்க் செல்கிறார்.

---

## கம்யூனிஸ்டுகள்பற்றி அதிமேற்றிராணியார்

கட்டானு, வியாழன்

“வறுமையையே ஆயுதமாகக் கொண்டு இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தமது கொள்கையைப் பரப்பிவந்துள்ளார்கள். வறுமையை அகற்ற முற்படுவது நல்லதுதான். ஆனல் வறுமைபற்றி லாவண்யமாக வர்ணிக்கும் இவர்கள் வறியவர்களுக்காக எதுவும் செய்திலர்.” இவ்வாறு கொழும்பு ஓ. எம். ஐ. அதிமேற்றிராணியார் வண. டாக்டர் தோமஸ் கூரே சீதுவை கிறிஸ்தவ தேவாலயத்தில் பேசுகையில் கூறினர்.

---

## போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் கிராம சபையின் 9-ம் வட்டார இடைத் தேர்தலில் திரு. சிவக்கொழுந்து கனகரத்தினம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

---

# ‘இந்தியாவை சீன விழுங்கிவிட முடியாது’
## சென்னையில் திரு. மேனன்

சென்னை, ஏப். 20

“சீனவை இந்தியா விழுங்கிவிட முடியாது. அதேபோல் இந்தியாவையும் சீன விழுங்கிவிட முடியாது” என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று இங்கு ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. மேனன் தமது பேச்சில் இந்தியாவில் சீனவும் பாகிஸ்தானும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனவென்று குறிப்பிட்டார்.

யுத்தம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளையோ குழப்பம் ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளையோ இந்தியா ஒருபோதும் செய்யமாட்டாது என்று திரு. மேனன் கூறினர். “ஆனல் எந்த நாடாவது இந்தியாமீது தாக்குதல் நடத்தினல் அதை எதிர்த்து முறியடிக்கும் சக்தி இந்தியாவுக்கு இருக்கிறது” என்று அவர் சொன்னர்.

மக்களின் ஒற்றுமையாலும் தொழில் வளத்திலுைம் இந்தியா தனது பிரதேச உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று திரு. மேனன் கூறினர்.

---

நியுயோர்க், ஏப். 20

விமானத்திலிருந்து புதியரக ஏவுகருவியொன்றைச் செலுத்தும் பரீட்சையில் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது.

# அயூப்கான் இந்தியா வரமாட்டார்

புதுடில்லி, ஏப்ரல் 20

இன்றுள்ள நிலையில் இந்தியாவுக்கு விஜயம் செய்வதால் உரிய பலன் ஏதும் கிடைக்குமென்று தாம் கருதவில்லை யென பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் இந்திய ஹைகமிஷனுக்குத் தெரிவித்துள்ளளார்.

இத்தகவலை இந்திய வெளிவிவகார ராஜாங்க மந்திரி திருமதி லட்சுமி மேனன் நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு பாகிஸ்தான் ஜனதிபதிக்கு இந்தியா விடுத்த அழைப்பு ரத்துச் செய்யப்பட்டுவிட்டதா என்று லோகசபையில் ஒரு அங்கத்தவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த திருமதி லட்சுமி மேனன் ‘அந்த அழைப்பு ரத்துச் செய்யப்படவில்லை’ என்று கூறினர்.

காஷ்மீர் பிரச்னைக்கு இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா கொண்டிருக்கும் ஆவலை பாகிஸ்தானுக்கு இந்தியா தெரிவித்துள்ளது என்று திருமதி லட்சுமி மேனனன் கூறினர். ஆனல் பாகிஸ்தான் பாதுகாப்புச் சபைமூலம் கிளர்ச்சி செய்யும் முயற்சியிலேயே அதிக ஆவல் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறதென்று அவர் சொன்னர்.

காஷ்மீர் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமும் அதே சமயம் பாதுகாப்புச் சபை விவாதம் மூலமும் தீர்வுகாணும் முயற்சி பொருந்தமாட்டாதென்றும் இரண்டில் ஒரு வழியையே கடைப்பிடிக்க முடியுமென்றும் திருமதி மேனன் கூறினர்.

---

## இலக்கிய உரை அரங்கம்

குரும்பசிட்டி, வியாழன்

குரும்பசிட்டி உதய தாரகை சனசமூக நிலையத்தினர் இம்மாதம் 22-ம் திகதி இலக்கிய உரை அரங்கம் ஒன்றை நடத்துதற்கு ஏற்பாடு செய்துவருகின்றனர். குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி அரங்கில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர் இராஜபாரதி, சாகித்திய மண்டல பரிசுபெற்ற சிறுகதை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ‘மரகதம்’ ஆசிரியர் சுப. இளங்கீரன், பண்டிதர் வ. நடராஜன், ஆசிரியர் வ. கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்வார்களெனத் தெரியவருகிறது.

---

## நேபாள மன்னர்-நேரு பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஏப். 20

நேபாள மன்னர் மகேந்திரரும் பாரதப் பிரதமர் நேருவும் நேற்று இரண்டாவது தடவையாகச் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் இந்திய-நேபாள உறவு நிலைகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்று பிரதமர் நேரு, மன்னர் மகேந்திரருக்கு நண்பகல் விருந்தளித்தார்.

இன்று நேபாள-இந்திய அதிகாரிகள் கூடிப் பேசுகின்றனர். மன்னர் மகேந்திரரும், பிரதமர் நேருவும் நாளை மீண்டும் சந்தித்துப் பேசுவர்.

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன், கன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## அணு ஆயுத சோதனை தடை பேச்சு
### மீண்டும் ஆரம்பிக்க சம்மதம்

ஜெனிவா, ஏப். 20

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாட்டில் அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் சம்பந்தமாக கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்காக மகாநாட்டில் கலந்துகொள்ளும் எட்டு நடுநிலைமை நாடுகளும் சமர்ப்பித்த புதிய சமரசத் திட்டத்தை அடிப்படையாக வைத்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சம்மதம் தெரிவித்துள்ளன.

---

## ரயில் கட்டணம் அதிகரிப்பு

புதுடில்லி, ஏப். 20

1962-63 ம் ஆண்டுக்கான ரயில்வே வரவு செலவுத் திட்டத்தை ரயில்வே மந்திரி திரு. சுவர்ண்சிங் நேற்று லோகசபையில் சமர்ப்பித்தார்.

இத்திட்டத்தின்படி பிரயாணிகள், சரக்குக் கட்டணம் உயர்த்தப்படவிருக்கிறது. முதல் வகுப்பு டிக்கட் கட்டணத்தில் 15 சத விகித உயர்வும், இரண்டாம், மூன்றும் வகுப்புக் கட்டணத்தில் 10 சத விகித உயர்வும் ஏற்படவிருக்கிறது.

கட்டண உயர்வு ஜூலை மாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

---

## கால் விரல் அடையாளம்

ஸ்டாக்ஹோம், ஏப். 19

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குக் கைவிரல்அடையாளம் உபயோகிக்கப்படுவது போல் இனி கால்விரல்அடையாளமும் உபயோகிக்கப்படவிருக்கிறது.

தென் சுவீடனிலுள்ள லண்ட் என்ற இடத்தில் பிரசவ ஆஸ்பத்திரியொன்றில் புதிதாகப் பிறந்த குழந்தைகளை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு கால்விரல் அடையாளங்களையே உபயோகிக்கிறார்கள்.

---

## கருவாட்டு வர்த்தகம்
### டாக்காவிலிருந்து தூதுகோஷ்டி புறப்பட்டது

டாக்கா, ஏப். 20

இலங்கைக்குக் கருவாடு ஏற்றுமதி செய்வது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகக் கிழக்குப் பாகிஸ்தான் வர்த்தகத் தூதுகோஷ்டியொன்று நேற்று டாக்காவிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது.

---

## ஜூலை முதல் அமுலுக்கு வரும்

லண்டன், ஏப்ரல் 20

காமன் வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரிட்டனில் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் இவ் வருடம் ஜூலை முதல் திகதியிலிருந்து அமுலுக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### மணி வாக்கு

உடல் முழுதும் நோய் பட்டு அழுகிப்போயிருந்தாலும் உண்மை பக்தனின் ஆத்மா பூரண ஆரோக்கிய நிலையிலேயே சுத்தமாக இருக்கும். அவன் ஆத்ம சம்பத்தை அனுபவிப்பான்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 8 மீ உ (21-4-62)


### சமய பாடம்

அச்சுவேலியிலிருந்து ஓர் இந்து மாணவர் நமக்கு எழுதியுள்ள கடிதத்தில், இப்போதுள்ள சமயபாடத் திட்டத்தை படிக்க மிகக் கடினமாக இருக்கிறதென்கிறார். வேதம், சம்கிதைகள், பிரமாணங்கள், உபநிடதங்கள், தர்ம சாத்திரங்கள், புராணங்கள், ஆகமங்கள் இவை தங்களால் படிக்க முடியாமலிருப்பதாயும், 'கொஷீதகியம்', 'கௌதுமம்' முதலிய சொற்கள் மனதில் வைத்துக்கொள்ள இயலாதிருப்பதாயும், கூறுகிறார். சமயம் போதிக்கும் ஆசிரியர்களும், இவற்றை விளக்க முடியாமல் திகைக்கிறார்களாம்.

இந்தப் பாடத்தைப் பார்த்தால் இது சைவசமயத்தின் வளர்ச்சியைத் தடை செய்வது போலிருப்பதாயும், இப்பாடத் திட்டத்தில், கஷ்டமான பகுதிகளை நீக்கி, புதிய திட்டப்படி பரீட்சை எழுத உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டிருப்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து இதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றே கருதுகிறோம்.

சமய பாடத்தைக் கட்டாய பாடமாகப் புகுத்தியதன் நோக்கமென்ன? ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமய உண்மையை அறிந்து, அதன்படி ஒழுகி, வாழ்க்கையில் நல்ல பயன அடையவேண்டுமென்பதாகத்தான் இருக்க முடியும். பாடங்களை மிகக் கடினமாக்கி, மாணவர்கள் படித்துப் புரிந்து கொள்ளவும் தக்க வசதிகள் செய்யாதிருந்தால், அவற்றிலே மாணவர்களுக்கு கவர்ச்சிக்குப் பதில் வெறுப்பே ஏற்படக்கூடும். எந்த நோக்கத்துடன் இது கட்டாய பாடமாக்கப்பட்டதோ அதற்கு நேர்மாறான பலன் கிடைப்பதாக இருக்கும்.

சமயங்களுக்குப் பதில் ஆத்மீகத்துக்கு முக்கியமளிக்கும் காலம் இதுவென்று ஆசார்ய வினோபாபாவே தெரிவித்தார். சமயங்கள் மக்களைப் பிரிப்பதாயின், அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படுவதற்கில்லை. பிரிந்துள்ள மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து, உலகத்தை ஓர் அன்புக் குடும்பமாக்க வழி காட்டக் கூடிய முறையிலே சமயக் கல்வி போதிக்க வேண்டிய காலம் இது. இதற்கிணங்க சமய பாடத் திட்டத்தைத் திருத்தி அமைத்து, அதைப் போதிக்கவும் ஒழுங்கு செய்வதே உண்மையில பயனளிக்கும். இது முடியாவிடில், மாணவர்களுக்கு சமயபாடமெனும் பெயரால் ஜீரணிக்க முடியாத இரும்புக் கடலைகளைச் சாப்பிடும்படி செய்யாமல் இருப்பதே மேலாகும்.

### ஜனநாயக மன்று

சென்ற புதன்கிழமையன்று பார்லிமெண்ட் கூட்டம், 'கோரம்' (20 பேர் கூட) இன்றி கலையநேரிட்டது. தலைவர் மணி அடித்தும்கூட போதியமெம்பர்கள் வராததால் கூட்டம் கலையவேண்டியதாயிற்று. இதற்கான பொறுப்பு மற்றவர்களைவிட அரசாங்கக் கட்சியையே அதிகம் சேரும்.

தோட்டப் பாடசாலைகள் விஷயமாக உடுப்பிட்டி மெம்பர் கொண்டு வந்த தீர்மானம், அரசாங்கக் கட்சிக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதற்காக, அதுபற்றிய விவாதம் நடைபெற முடியாமல் 'கோர'மின்றி தடுத்துவிட்டது நேர்மையோ, கண்யமோ, ஜனநாயகமோ ஆகாது.

யு. என். பி. உட்பட எதிர்க் கட்சிகளெல்லாம் தீர்மானத்தை ஆதரித்துள்ளன. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மாவனல்லை மெம்பர், தோட்டப் பாடசாலைகளில் அரசாங்க மொழிக் கொள்கையைப் புகுத்த வேண்டுமென்று கொண்டுவந்த திருத்தத்தை ஆமோதிப்பார் ஏற்றுப் போயிற்று. கல்வி மந்திரியோ அவரது காரியதரிசியோ விவாதத்தின்போது (சிலசமயம்) பிரசன்னமாயிருந்தும், இது பற்றி ஒன்றும் பேசாமல் மௌனம் சாதித்தனர்.

மனித நீதிக்கும் உரிமைக்கும் ஒத்த அப்பிரேரணையை மந்திரி எதிர்த்துப் பேசமுடியாத நிலையில் மௌனம் சாதித்திருக்கலாம். என்றாலும், ஒரு முக்கிய தீர்மானத்தைப்பற்றி விவாதம் நடக்கையில், 'கோர'மின்றி அதைத் தடுக்க 'முற்படுவது' பிரச்சினையைத் தீர்க்க உதவாது. இதற்கு மாறாக, இவ்விஷயமாக அரசாங்கத்தின் போக்கு எவ்வளவு தவறானதென்பதையே உலகத்துக்குக் காட்டுவதாகும்.

# கண்கள் பாதுகாப்பு அவசியம்
## இல்லையேல் மூளையும் பாதிக்கப்படும்

**—டாக்டர் எஸ். ஆர். கே. மாலிக்—**

கண்கள் மனிதனின் வாழ்வில் எந்த அளவுக்கு இன்றியமையாதனவாகஇருக்கின்றன கண்களை இழந்தவர் எல்லாவற்றையுமே இழந்தவராவார். இப்போது சுமார் ஒரு கோடி பேர் பார்வை இழந்து நிற்கின்றனர். அவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஓரளவு பார்வையிழந்து வேலை செய்து வருபவர்கள் எண்ணிக்கை இதில் சேரவில்லை.

ஒரு பொருளைப் பார்ப்பது, பல அம்சங்கள் கூட்டாகச் செயல்படும் சிக்கலான முறையாகும். (1) காப்பவரைப் பொறுத்தது, பொருள்களைக் கண்கள் காணவேண்டும்; கண்கள் வழியாகச் செல்லும் தகவல்களை மூளை துல்லியமாக உணர்ந்து விளக்கவேண்டும்; (2) சுற்றுப்புற நிலைமை பொருள்களைக் காண வேண்டிய தற்கேற்ற வெளிச்சம், காண வேண்டிய பொருள் இதில் ஏதாவதொரு அம்சத்தில் தடை ஏற்பட்டால் பார்வை குன்றும்.

### போஷாக்குக் குறைவு

ஏழ்மை நாடான இந்தியாவில் போஷாக்குக் குறைவின் காரணமாகப் பல நோய்கள் தோன்றுகின்றன. போஷாக்குக் குறைந்த கண்களை இரு வழிகளில் பாதிக்கிறது. உணவில் வைட்டமின்களும் புரத சத்துக்களும் குறையாதிருந்தால் உடற் கூறு பாதிக்கப்படுகிறது. தசை நார்கள் பலவீனமடைவதால், நோய் தொற்றுவதோடு, எதிர்த்துப் போராடும் சக்தியையும் இழந்து விடுகிறது.

உணவுப் பொருள்களில் வைட்டமின் 'ஏ' சத்து கலந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும். அதில்லாவிடில் மாலைக் கண்ணோய் செரோப்தால்மியா, காட்டராக் ஆகிய நோய்கள் தோன்றும். ஆகவே வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு இந்த வைட்டமின் சத்துக்கள் மிகவும் அவசியமாதலால் உணவுப் பொருள்களில் வேண்டிய அளவு வைட்டமின் சத்துக்கள் இருக்கவேண்டும். பால், வெண்ணெய், மீன், காரட், கிழங்குகள் ஆகிய 'ஏ' வைட்டமின் கலந்த பொருள்களைக் குழந்தைகள் தாராளமாக உட்கொள்ள வேனடும். குழந்தைகளுக்கு பள்ளிகளில் பால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். புரதச் சத்துக்கள், வைட்டமின் 'ஏ' ஆகிய சத்துக்கள் குறைவாக இருப்பதன் காரணமாக கெராடோமாலிகா என்னும் இன்னொரு நோய் தோன்றுகிறது. இந்நோய் அடிக்கடி தென் இந்தியாவில் காணப்படுகிறது. வைட்டமின் 'ஏ' சத்துக்களும் புரத சத்துக்களும் இந்நோயை குணப்படுத்தும்.

கண்ணோய் நோய்க் கிருமிகளாலும் ஏற்படுகின்றன. கராகோமா இன்னொரு ரக கண் வியாதி. கிராமங்களில் 80 முதல் 90 சத விகிதம் வரையில் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய் விரைவில் தொற்றிப் பரவுகிறது. சுகாதார நிலைமைகளைச் சீர்படுத்துவதன்மூலமாக இந்நோய் பரவுவதைத்தடுக்கலாம். கண்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு குழந்தைக்கு சொல்லித்தந்து ஊக்குவிக்க வேண்டும். பிறர் உபயோகித்த துணிகளைக்கொண்டுமுகத்தைச் சுத்தம் செய்யக் கூடாது; பிற குழந்தைகளின் கைக்குட்டையையும் பயன்படுத்தக்கூடாது. கண்ணோய் விஷயத்தில்விட்டுச் சிகிச்சையை அறவே விட்டு விட்டுவிடவேண்டும். போலி வைத்தியர்களைக் கொண்டும் கண்ணோய் சிகிச்சை செய்யக் கூடாது. எல்லாக் குழந்தைகளுக்கும் அம்மைப்பால் குத்தி வைக்கவேண்டும்.

### ஆரம்பத்தில்

கண் பார்வை சரியாக இல்லாவிட்டால் மூளையும் பாதிக்கப்படும். கண்ணாடி போட்டு பார்வையைச் சரியாக்க முடிகிற விஷயங்களில் ஆரம்பத்திலேயே கண்ணாடி போட்டுக் கொள்ளவேண்டும். பள்ளிக் கூட சுகாதாரத் திட்டங்களின் கீழ் இவை கவனிக்கப்பட வேண்டும். ஆரம்ப காலத்திலேயே கண்களைப்பரிசோதித்து நோயைக் குணமாக்குவது அவசியமாகும். மாணவர்கள், பெற்றோர்கள், வைத்தியர்கள் ஆகியவர் இந்நோயை ஆரம்ப காலத்திலேயே குணப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணரவேண்டும்.

உட்கார்ந்து படிப்பதற்கேற்ற சரியான முறைபற்றியும், போதுமான வெளிச்சத்தின் அவசியம்பற்றியும், குழந்தைகளுக்கு விளக்கம் சொல்லித்தரப்படவேண்டும். சரியான முறையில் அச்சடிக்கப்பட்டிராத புத்தகங்களும் வெளிச்சக் குறைவும், கண்களைப் பாதிக்கும்; கண்களை மங்க வைக்கும். ஒளி கூடிய விளக்குகளும், கண்களைப்பாதிக்குமாதலால் மிதமான வெளிச்சத்தில் தான் படிக்கவோ எழுதவோ வேண்டும். பள்ளிக்கூடங்களில் போதுமான வெளிச்சமிருப்பது அவசியமாகும். இயற்கையாகக் கிடைக்கும் வெளிச்சம் மிகவும்நல்லது. குழந்தைகளின் கண்களில் காயமேற்பட்டால், வெகு சீக்கிரத்தில் பார்வையை இழந்துவிடக்கூடும். அதனால், அவர்களிடம் கூர்மையான சாதனங்களைக் கொடுக்கக்கூடாது. பள்ளி ஆய்வுக் கூடங்களில், ரசாயனப் பொருள்களைக் கையாளுவதிலும் கவனமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

# பிரஞ்சுப் படைத் தளபதிக்கு டிகோலின் புதிய உத்தரவு
## அல்ஜீரியாவில் நேற்று 23 பேர்பலி

அல்ஜியர்ஸ், ஏப். 20

அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சுப் பாதுகாப்புப் படைகளின் புதிய தளபதிக்கு பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் அல்ஜீரியாவிலுள்ள இரகசிய ராணுவ ஸ்தாபனத்தை முறியடிப்பதற்குப் புதிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

புதிய பிரெஞ்சுத் தளபதி அல்ஜீரிய நிர்வாகசபைத் தலைவருடனும் அல்ஜீரிய விவகாரங்களுக்கான பிரெஞ்சு மந்திரியுடனும் ஆலோசனை நடத்திவிட்டு பாரிசுக்குச் சென்றுள்ளார். பாரிசில் ஜனாதிபதி டிகோலுடன் ஆலோசனை நடத்திவிட்டு மீண்டும் அல்ஜீரியாவுக்குத் திரும்புவார்.

கலகம் அடக்கும் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த 600 பொலிசார்; அல்ஜீரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அல்ஜீரியாவில் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரின் பலாத்கார நடவடிக்கைகளால் நேற்று 25 பேர் கொல்லப்பட்டனர். 26 பேர் காயமடைந்தனர்.

இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரின் நடவடிக்கைகளால் அல்ஜீரிய முஸ்லிம்கள் ஆத்திரம் கொண்டுள்ளதாகவும் இது பாரிசில் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பிரெஞ்சு மந்திரிசபையில் ஏற்பட்ட மாறுதலும் அல்ஜீரியாவில் பிரெஞ்சுப் படைத் தளபதி மாற்றப்பட்டதும் அல்ஜீரியா விவகாரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

---

## "தேசிய விளையாட்டுக்களை நிலைநாட்டவேண்டும்"
### பீட்டர் சில்வா யோசனை

களுத்துறை, வெள்ளி

"பண்டாரநாயக்க ராஜர் தொடக்கிவைத்த கலாச்சார இலாகா, பல்கலைக் கழகப் படிப்புப்பெற்ற 'கறுப்பு' வெள்ளையர்கள் மூலமாக நாட்டின் கலாசாரத்தை அபிவிருத்தி செய்ய முயலுகிறது. இந்த வகையான கலாச்சார அபிவிருத்தியைக் கலாச்சார சிதைவு என்றேகொள்ளலாம்"

இவ்வாறு, லங்கா ஜாதிக குரு சங்கமாஜாவின் பொதுக் காரியதரிசி திரு. டி. பீட்டர் சில்வா மகல்கந்தையில் நடைபெற்ற புதுவருடக் கொண்டாட்ட விழாவில் கலந்து பேசுகையில் கூறினர். மேலு பேசுகையில் அவர் கூறியதாவது:-

"நாட்டின் தேசிய விளையாட்டுக்கள் மேலைநாட்டவர் ஆதிக்கத்தினல் மறைந்துபோய் விட்டன. மேலை நாட்டு விளையாட்டுகளெல்லாம் பள்ளிக்கூடங்களில் கையாளப்பட்டு வருகின்றன. சிங்கள விளையாட்டுக்களைத் திரும்பவும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும்."

### ஐயாறன் எழுதுவது

கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த உகாண்டாவிலிருந்து வந்துள்ள ஒரு தமிழ் தம்பதிகளை இங்கு ஒரு விருந்தில் சந்தித்தேன். 'கம்பலா' எனும் சர்வகலாசாலையில் அவர் ஒரு பேராசிரியர்.

இலங்கை, பேராதனை சர்வகலாசாலையில் ஆராய்ச்சித் துறையிலிருந்த அந்த இலங்கைத் தமிழரை திடீரென பொலனறுவைக்கு மாற்றியதால் அதை ஆட்சேபித்து, தமது பதவியையே ராஜினமாச் செய்துவிட்டு, பரதேசம் சென்று இப்பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அத்தம்பதிகள் மிகவும் மகிழ்ச்சியுடனேயே காணப்பட்டனர்.

* * *

எங்கு சென்றாலும் தன் சொந்தநாடு என்ற பாசம் விடுமா? 21 மாதங்களுக்கு ஒரு முறை ரஜா பெற்று அவர்கள் இலங்கைக்கு வருகின்றார்களாம். அவர்களது குழந்தைகள் பிரிட்டிஷ் பாஸ்போர்ட் பெற்று சீமையில் படிக்கின்றனர்.

தம் குழந்தைகள் 'உலகப் பிரஜைகளாக' வாழ நேரிடுமென்றும் கூறினர் அவர். ஒரு சின்ன நாட்டுப் பிரஜையாக இல்லாமல் எல்லோரும் உலகப் பிரஜைகளாகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

* * *

கிழக்காபிரிக்காவில் வாழ்க்கை எப்படி என்று விசாரித்தேன். ஆபிரிக்கா வெகு வேகமாக வளர்ந்து வருவதாகவும் எதிர்காலம் மிக மேலாக இருக்குமென்றும் சொன்னர். அங்கு போய்விடலாமா என்று தோன்றியது. ஆனல் அது முடியக்கூடியதா?

நிறவேற்றுமைக் கொடுமைகள் அங்கு இல்லையாம். ஆனல் அங்குள்ள ஆசியாக்காரர்களில் சிலர், ஆபிரிக்கரை அவர்கள் தோல் அதிக கறுப்பாக இருப்பதற்காக வேற்றுமைப்படுத்துவதாயும், சிலர் நேர்மையற்ற முறையில் வர்த்தகம் செய்து சுரண்டுவதால், அவர்களை ஆபிரிக்கர்கள் வெறுப்பதாயும், மற்றப்படி கல்வி முதலிய சேவை காரணமாக வரும் ஆசியாக்காரருக்கு அங்கு அதிக இடமுண்டென்றும் தெரிவித்தார்.

* * *

தென்னாபிரிக்காவில் நிலைமை எப்படி என்று கேட்டேன். அங்கு வெள்ளையரல்லாதவர்கள் மானத்துடன் வாழ முடியாதபடி நிறவேற்றுமைச் சட்டங்கள் இருக்கின்றனவாம். 'பாஸ்' இல்லாமல் கடைக்குப் போய் சாமான் வாங்கின ஓர் ஆபிரிக்கரை, போலிசார் பிடித்து உதைத்து உதைத்தே கொன்றதாக ஒரு வெள்ளைக்காரப்பாதிரியே புத்தகமொன்றில் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். அதைக் கேட்கப் பயங்கரமாக இருந்தது.

ஆனல் இங்கும்கூட நிறம், இனம், சாதி முதலிய வேற்றுமைகள் நம்மிடையே இருப்பது நம்மில் பலருக்கு மறந்து விடுகிறது. பெண்களின்தோல் சற்றே கறுப்பாக இருந்துவிட்டால், அதற்காக அதிகமான சீதனம் கொடுக்க வேண்டியிருக்கின்றது! இன, சாதிக் கொடுமைகள் இங்கு நீங்கினவா? இதைப்பற்றிய நினைப்பு வந்ததும் தென்னபிரிக்காவைப்பற்றிக் கண்டிக்க நமக்கு வாயடைத்துவிடுகிறதல்லவா?

* * *

அல்லலாக ஐம்பூதங்களாட்டினும்
வல்லவாறு சிவாய நம வென்று
நல்லமேவிய நாதனடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே

— திருநாவுக்கரசர்

# "உத்தியோகக் கல்வி இனி தமிழருக்கு உபயோகமில்லை"

## சாவகச்சேரி எம். பி. பேச்சு

சாவகச்சேரி, ஏப். 19

"கல்வியால் அரசாங்க உத்தியோகம் பார்க்கலாமென்றிருந்த காலம் அந்நியர் ஆட்சியுடன் தமிழருக்கு முடிவடைந்து விட்டது என்று கூறுவது தவருகாது. அந்நியர் ஆட்சியிலும், இன்றைய ஆட்சியிலும் தமிழருக்குக் கிடைக்கும் உத்தியோக ஸ்தானங்களிலிருந்து இதைஊகித்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கிறது. ஆகவே உத்தியோகக் கல்வி புகட்டுவதை விடுத்து வாழ்க்கையை வளமாக்கக் கூடிய கல்வியை ஆசிரியர் சமூகம் புகட்ட முன்வரவேண்டும்."

இவ்வாறு கைதடி ஆரம்பப் பாடசாலைப்பெற்ருர் தினப் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தும்போது சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. எஸ். கதிரவேற்பிள்ளை பேசும்போது கூறியதாவது:-

"ஒரு இனம் முன்னேறுவதற்குச் சகிப்புத் தன்மையும் ஆத்மீக சக்தியும் அந்த இனத்தின் மத்தியில் இடம் பெற வேண்டும். இத்தகைய புனிதமான ஆயுதங்களை நாம் கைக்கொண்டொழுகி எதிர் காலப் பிரஜைகளான சிறுர்களுக்கு முன்மாதிரி காட்ட வேண்டும். இத்தகைய கல்வி முறை ஆரம்பப்பள்ளி முதல் சர்வ கலாசாலைப் படிப்பு வரை நிகழ வேண்டும். ஆசிரியர்களும் பெற்ருேரும் இதில் கவனமெடுக்க வேண்டும்."

தென்மராட்சி மக்கள் முன்னேற்றச்சங்கச் செயலாளர் திரு. கே. நடராசாவும், திரு. என். எம். நடராசாவும், திரு. என். செல்லத்துரையும் மற்றும் பலரும் பேசினர்.

---

### நீர்வேலி பாலர் விடுதியில் திரு. நிகிற்றின்

நீர்வேலி, வெள்ளி

இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகரின் முதல் காரியதரிசி திரு. நிகிற்றினும் அவரது குடும்பத்தினரும் நீர்வேலி பாலர் பகல் விடுதி, மாதர் முன்னேற்றச் சங்கம் ஆகியனவற்றிற்கு விஜயஞ் செய்து அவைகளைப் பார்வையிட்டுச் சென்றனர்.

இவர்களுக்கு அங்கு ஓர் வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது. நீர்வேலி மாதர் முன்னேற்றச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடன, இசை நிகச்ழ்சிகளில் திரு. நிகிற்றினின் நான்குவயதுப் பெண் குழந்தையும் பங்கு பற்றி ரஷ்ய மொழியில் பாட்டுப்பாடி அதற்கு அபிநயம் பிடித்து நடனமாடிப் பலரது பாராட்டையும் பெற்றது குறிப்பிடத் தக்கது. இவர்களை வரவேற்று திரு. வி. எஸ். அப்புத்துரை, திருமதி வேதவல்லி கந்தையா ஆகியோர் பேசினர்.

திரு. நிகிற்றின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், பாலர் பகல் விடுதிக்கு விஜயஞ்செய்த போது தமது நாட்டில் இருப்பதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டதாகவும், ரஷ்யக் குழந்தைகள் சார்பில் இப் பாலர் பகல் விடுதிக்கு சில அன்பளிப்புகளை வழங்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

---

### ஸ்டாலின் மகன் மரணம்

மாஸகோ, ஏப். 20

ஸ்டாலினின் இளைய மகன் ஜெனரல் வஸலிலி ஸ்டாலின் சில தினங்களுக்கு முன் வொல்காப்பகுயில் காஸான் என்ற இடத்தில் காலமானதாக ஊர்ஜிதமற்ற செய்தியொன்று தெரிவிக்கிறது.

50 வயதான ஜெனரல் வஸலிலி டாலினின் மரணம் பற்றித் தங்களுக்கு ஒருவித தகவலும் கிடைக்கவில்லையென்று வெளி விவகார அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்டாலின் காலத்தில் சோவியத் விமானப்படையில் லெப்டினன்ட் ஜெனரலாகவிருந்த ஜெனரல் வஸிலி ஸ்டாலின் 1953-ம் ஆண்டில் ஸ்டாலின் இறந்த பின் ஓய்வு பெற்றவர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

---

### பிரார்த்தனையின் அவசியம்

#### மாவட்ட நீதிபதி வலியுறுத்தல்

சாவகச்சேரி, வெள்ளி

"ஊசலாடித் திரியும் மனத்தை ஒரு வழிப்படுத்தி கடவுள் நினைவில் செலுத்துவது பிரார்த்தனையாகும். பிரார்த்தனை மக்களுக்கு இன்றியமையாத தொன்ருகும். இன்றைய பிரார்த்தனையின் பலனைச் சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு நாளும் செய்யும் பிரார்த்தனையின் பலனையும் சிந்தித்துப் பாருங்கள். அவற்றின் பலனை நாம் அறியக்கூடியதாக இருக்கும். பிரார்த்தனையின் பலனை அறிந்தால் தான் பிரார்த்தனை செய்ய மனம் ஒரு வழிப்படும். மக்களுள் மாணிக்கமாய் விளங்குபர்கள் பிரர்த்தனையில் ஈடுபட்டவர்களாகவே இருப்பர்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. வி. தனபாலசிங்கம் சாவகச்சேரி குருபவனத்தில் திவ்விய ஜீவன சங்கக்கிளையொன்றை அங்குரார்ப்பணம் செய்து உரை நிகழ்த்தும்போது கூறினர்.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி ஆசிரியர் திரு. என். அருமைநாயகம் தலைமையில் இச்சங்கம் நிறுவப்பட்டது.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி திரு. வி. சிவஞானசுந்தரம் கூறியதாவது:-

"நல்லவர்களைக் கண்டு அவர்களின் அருள் ஞானம் பெற்ருல் கோவிலுக்குப் போக வேண்டிய கட்டம் ஏற்படாது. நாவலப்பிட்டியில் இருக்கும் வரையும் கோவிலுக்குப போக வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்படவில்லை. ஆனல் யாழ்ப்பாணம் வந்ததும் நல்லூர்க் கந்தன் என்னை ஈர்த்துவிட்டார்."

---

### 25 வருடத்தில் தேசிய உடை?

தொடந்துவை, வெள்ளி

"வேஷ்டியும் 'நாஷனலும்' தேசிய உடையாவதற்கு குறைந்தது இன்னும் 25 வருடங்களேனும் செல்லும்."

இவ்வாறு தொடந்துவை 'சில்விஸ்டர்' விளையாட்டுக் கழகத்தின் 16-வது ஆண்டு விழாவில் பேசுகையில் ரத்கம எம். பி. திரு. டி. ஈ. திலகரத்ன கூறினர்.

---

### இந்தி நூல்கள்

புதுடில்லி ஏப். 20

இந்திமொழிபேசாதபகுதிகளிலுள்ள பாடசாலைகள், நூல் நிலையங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கு இந்தி நூல்களை அனுப்புவதென்று கல்வி இலாகா முடிபு செய்துள்ளது.

---

### கிராம கைத்தொழில்

#### திட்டமிட ஒரு கமிட்டி

புதுடில்லி, ஏப். 20

கிராமத் தொழில்களின் முன்னேற்றத்தை ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைச் சிபார்சு செய்வதற்கு ஒரு கமிட்டி நியமிப்பதென்று இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்குத் திட்டமிடும் இக்கமிட்டியில் திட்டக் கமிஷன் துணைத் தலைவர், திட்டக் கமிஷன் அங்கத்தவர்களிருவர், மத்திய அரசாங்க மந்திரிகள் நால்வர் ஆகியோருடன் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணும் அங்கம் வகிப்பார்.

---

### புதிய உப-தபாற் கந்தோர்

வத்தகம, வெள்ளி

தபால் தந்திப் பகுதியின் உதவி மந்திரியின் மனைவி திருமதி டி. தென்னக்கூன், வத்தகமவுக்கு அருகாமையிலுள்ள வாவின்ஹஎன்னுமிடத்தில் புதிதாக நிறுவபபட்ட உப தபாற் கந்தோர் ஒன்றைத் திறந்து வைத்தார்.

குண்டசாலை எம். பி. திரு. யு. பி. ஜினதாசா, பலேகம விமலானந்த தேரோ, திரு. வால்டர் ஜயவர்த்தன, திரு. எஸ். எம். குணரத்ன ஆகியோரும் இன்னும் பலரும் இவ் வைபவத்தில் கலந்து சொற்பொழிவாற்றினர்கள்.

### காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

#### செப்டம்பர் 10-ந் திகதி ஆரம்பம்

லண்டன், ஏப். 20

காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாடு செப்டம்பர் மாதம் 10-ந் திகதி லண்டனில் ஆரம்பமாகும் என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மில்லன் நேற்று காமன்ஸ சபையில் அறிவித்தார்.

இந்த மகாநாட்டில் ஐரோப்பிய பொதுச்சபையில் பிரிட்டன் சேர்வது பற்றித்தான் முக்கியமாக விவாதிக்கப்படும்.

---

### தூதராலயத்தின் சொத்து களவாடப்பட்டது

கொழும்பு, வெள்ளி

கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்று வரும் போலந்து ஜவுளிக் கண்காட்சிக்கென இலங்கையிலுள்ள போலந்து ஸ்தானிகராலயம் தேர்ந்து வைத்திருந்த சுமார் ரூ. 750 பெறுமதியான கம்பளி ஜவுளித் தினுசுகள் காணமல் போய் விட்டதாக ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 14க்கும் 17க்குமிடையிலேயே இந்த ஜவுளித் தினுசுகள் காணமல் போனதாக போலந்து ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது. பாதுகாப்பான முறையில் பூட்டப்பட்டு வைத்திருக்கப் பட்டபோதும் இவை காணமல் போய்விட்டனவாம்.

கறுவாக்காட்டுப் பொலிஸினர் இதுபற்றி விசாரணை செய்து வருகிருர்கள்.

---

### திரு. கபூர் திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

இந்திய அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்துவதற்காகச் சென்றிருந்த இலங்கையிலுள்ள இந்திய ஹைக்கமிஷனர் திரு. பி. கே. கபூர் நேற்று கொழும்பு திரும்பினர்.

---

### 'பொறியில்' தானகவே அகப்பட்டார்

இலுக்தெனை, வெள்ளி

இலுக்தெனையைச் சேர்ந்த ஆர். எம். கிரிபண்டா என்பவர் துப்பாக்கிச் சூட்டினல் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடைய நிலைமை மோசமாகியிருப்பதாகத் தெரிகிறது.

தனது வயல் நிலத்தில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியின் முடுக்கியில் கட்டப்பட்டிருந்த கயிற்றைத் தவறுதலாகத் தாம் மிதித்துவிட்டதாகவும் முடுக்கி செயற்பட்டு குண்டுகள் தம்மீது பாய்ந்துவிட்டதாகவும் பதுளை ஆஸபத்திரிப் பொலிஸிடம் அவர் கூறினராம்.

---

### ரூ. 5,000 அபராதம்

காலி, வெள்ளி

வியாபாரிகளின் 'லைசென்ஸ்' உரிமைச் சட்டத்தின் பெயரால் திரு. எச். என். குணத்திலகா என்பவர் மீது ரூபா 5,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திரு. குணதிலகா ஒரு சில உணவுப் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமான விலைக்கு நகோடா தோட்டத்திலுள்ள இரு தொழிலாளர்களுக்கு விற்ருராம்.

இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. குணவர்த்தன விசாரணை நடத்தினர்.

காலி அரசாங்க அதிபர், லைசன்ஸ் சட்டத்தின் கீழ், இவரை ரூ. 5,000 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

---

வண்ணை ஆதீன வித்துவான் திரு. வி. கே. ஆறுமுகம் மலை நாட்டிலே தப்ரபான தோட்டத்திலே மூன்று நாள் நடைபெறும் இளங்கோ மன்ற ஆண்டு விழாவில் கலந்துகொண்டு கதாப்பிரசங்கம் செய்கிருர். இவ் விழாவிற்கு சுவாமி சச்சிதானந்தர் தலைமை வகிக்கிருர்.

---

### மன்னர் மகேந்திரர்-மொரார்ஜீ சந்திப்பு

புதுடில்லி, ஏப் 20

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள நேபாள மன்னர் மகேந்திரரை இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாயும் உள் விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியும் இன்று சந்தித்தனர்.

---

### கனடாவிலிருந்து கருவாடு

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் ஏற்பட்டுள்ள கருவாட்டுப் பற்ருக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பெல்ஜியம், கனடா ஆகிய இரு நாடுகளும் உதவுகின்றன.

கருவாட்டை பெல்ஜியம் இங்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை வர்த்தக, உணவுக், கப்பல் மந்திரி செய்துள்ளதாகத் தெரிகிறது. எவ்வளவு தொகை கருவாட்டை பெல்ஜியம் அனுப்பி வைக்கும் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. வெகு விரைவில் இது பற்றி பெல்ஜியம் தகவல் தெரிவிக்கும். கனடாவும் இங்கு கருவாடு அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இரு நாடுகளும் கருவாடு அனுப்பி வைத்ததும் தேவையான அளவுக்கு கருவாடு விநியோகிக்கப்படும்.

---

### விளையாட்டுக் கழக தினவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் குருநகர் புனிதவளவன் விளையாட்டுக் கழக தினவிழா இம்மாதம் 22-ந் திகதி வண. குரவர் ஏ. சார்பே தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

---

### ரூ. 86 லட்சம் செலவில் வீடமைப்பு

கல்கத்தா, ஏப். 20

மேற்கு வங்காளத்தில் 86 லட்சம் ரூபாய் செலவில் புதிய வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

---

### சுகாதாரத் தொழிலாளர் கிளை

#### புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க காங்கேசன் துறைக் கிளையின் வருடாந்தக் கூட்டம்சேவையாளர் உணவுவிடுதியில்யாழ். சம்மேளனத்தலைவர் திரு.பி. தேவராசா தலைமையில்நடைபெற்றது வைத்திய அதிபர் டாக்டர் எம். வேதாரண்யமும் சமுகமளித்திருந்தார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-கே. பரமேஸ்வரன். உப தலைவர்:- எஸ். வைத்திலிங்கம். காரியதரிசி:- பி. பத்திநாதர். உப காரியதரிசி:- எஸ். தர்மலிங்கம். தனதிகாரி:-எஸ். ஜெயரத்தினம்.

நிர்வாகசபை அங்கததவர்கள்:- என். இராசதுரை, எஸ். பரமசாமி, எஸ். இராமநாத பிள்ளை, எம். அருளப்பு, திருமதி டி. பார்வதி.

---

### டச் பற்றி ஜெனரல் நசுக்கியான்

ஜாகர்த்தா, ஏப்ரல் 20

மேற்கு இரியானுக்கு கப்பல் மூலமும் விமானங்களிலும் துருப்பினரைக்கொண்டு போய்க்குவிப்பதற்காகவே மேற்கு இரியான் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை டச் அரசாங்கம் கடத்தி வருகிறது என்று இந்தோனேஷிய பாதுகாப்பு மந்திரி ஜெனரல் நசுக்கியான் கூறினர்.

"மேற்கு இரியானைத் தனி ராஜ்யமாக்குவது அல்லது இந்தோனேஷியாவிடம் ஒப்படைப்பது இந்த இரண்டு வழிகள்தான் டச் அரசாங்கத்துக்கு உள்ளது. இதில் இரண்டாவதுவழிதான் இந்தோனேஷிய-டச் உறவுக்கு உகந்தது" என்று ஜெனரல் நசுக்கியான் தெரிவித்தார்.

---

### 113 வயது மூதாட்டி கார் மோதி மரணம்

பையாகலை, வெள்ளி

113 வயதான பொடிசே சீதா என்னும் மூதாட்டி கார்மோதியதால் மரணமானர்.

கார் மோதியதும் பிம்புரா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவருக்கு, இடது கால் முறிவுற்றிருந்தது. சம்பவம் நடைபெற்ற தினமன்மே நகொட ஆஸ்பத்திரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு, அங்கு காலமானர்.

மூதாட்டிக்கு மொத்தமாக 38 பேரப்பிள்ளைகள் உளர். கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்த சமயத்திலேயே அவரைக் கார் மோதியது.

---

### பெண்வழக்கறிஞர் சங்கம்

பம்பாய், ஏப்ரல் 20

பெண் வழக்கறிஞர் சம்மேளனம் ஒன்று இன்று பம்பாயில் ஆரம்பமானது.

# 'பொருளாதார விருத்திக்கு தனியார்துறை உதவத் தயார்'

## திரு. என். யு. ஜயவர்த்தன விளக்கம்

கொழும்பு, வெள்ளி

"கைத்தொழில், பொருளாதாரஅபிவிருத்திக்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் செய்ய வேண்டிய உதவிகளை அரசாங்கம் வரையறை செய்துகூறுமானல், இந்தத் துறைகளில் தம்மால் இயன்ற அளவு ஈடுபடுவதற்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தயாராகவிருக்கின்றன. அரசாங்கம் அவற்றுக்கு வேண்டிய சாதனங்களையும் தக்க சூழ்நிலையையும் உருவாக்குமானல் தனிப்பட்டவர்கள், பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வளவோ உதவி புரிவார்கள்."

இவ்வாறு இலங்கை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவராகவிருந்து இளைப்பாறும் திரு. என். யு. ஜயவர்த்தன சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். மேலும் பேசுகையில் திரு. ஜயவர்த்தன கூறியதாவது:

"தனிப்பட்டவர்களுக்கு இந்த வகையில் அரசாங்கம் அளிக்கக் கூடியது நிதி உதவியாகும் தொடர்ச்சியாக ஒரே மாதிரியான கொள்கையைக் கடைப் பிடிப்பதே அரசாங்கம் ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையாகும். தனிப்பட்ட ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொள்வதற்குத் திறமை வாய்ந்த குழுவையோ அல்லது சபையையோ அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

கைத்தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளிப்பதிலும், திறமையான யுக்திகளைக் கையாளுவதற்கும் அரசாங்கம் உதவ வேண்டும். அத்தோடு கைத்தொழில் இயக்கங்களுக்குப் போதிய பாதுகாப்புக்கள் தேடிக் கொடுக்க வேண்டும். உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் நல்ல தரமுடையனவாக இருக்கின்றனவா என்பதுபற்றியும் அக்கறையெடுக்கப்பட வேண்டும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பல வழிகள் உள்ளன. இவைபற்றி எதுவும் கூறுவது என்னுடைய கடமையல்ல. ஆனல் கைத்தொழில் துறையில் தனியார் ஆதரவையும் பெறுவதற்குச் சீக்கிரத்தில் ஏதாவது வகை செய்யப்பட வேண்டும்.

தனியார் துறையின் பிரதிநிதிகளை அரசாங்கம் அழைக்கும்போது தனிப்பட்டவர் அடிப்படையின்றி ஸ்தாபன அடிப்படையில் அழைக்க வேண்டும்."

# லண்டன் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை

## விஞ்ஞானத்துறை மாணவர் கஷ்டம்

யாழ்ப்பாணம, வெள்ளி

லண்டன் சர்வகலாசாலையால் நடாத்தப்படும் பொதுத் தராதரப் பத்திர உயர் பிரிவுத் தேர்வுக்கு செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கொழும்பைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள மாணவர்கள் இதனல் பெருங் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

கொழும்புக்கு வெளியிலுள்ள மாணவர்களுக்கு விலங்கியல் மட்டும் கொழும்பிலும் தாவரவியல், பௌதிகவியல் இரசாயனம் ஆகிய பாடங்களின் செய்முறைத் தேர்வு பேராதனையிலும் நடைபெறஏற்பாடாகியிருக்கிறது. இப்பாடங்கள் அடுத்தடுத்த நாட்களிலோ ஒரு கிழமை இடைவேளையிலோ நடாத்தப்படவில்லை. சுமார் 20 நாட்கள் இடைவெளியில் இப்பாடங்களின் பரீட்சை நடைபெறுவதால் பல ஏழை மாணவர்கள் பிரயாணச் செலவு, தங்கி நிற்கும் வசதி முதலியவற்றினல் பெருங் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாகத் தெரிகிறது.

## மாணவ தாதிகளுக்கு புதிய நியதி

கொழும்பு, வெள்ளி

மூன்றுவருட பயிற்சி பெறும் தாதி மாணவிகள் தமது இறுதிப் பரீட்சையில் சித்தியடையத் தவறினல் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளப்படி ரத்துச் செய்யப்படும் எனத் தெரிகிறது. திரும்பவும் அவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையும் வரை அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சம்பளப்படி ரத்துச் செய்யப்படுமாம்.

தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் தாதிகள் விரைவாகவே பயிற்சி கல்லூரியிலிருந்து வெளியேறும் வகை செய்வதற்காகக், கல்வி இலாகா இந்தப் புதிய தீர்மானஞ்செய்துள்ளது.

## கழுத்தில் சுருக்கிட்டு இறந்து கிடந்தார்

### வளலாயில் சம்பவம்

காங்கேசன் துறை, வியாழன்

தற்கொலை செய்யப்போகின்றேன் என்று பலநாள், குடும்பத்தினருக்கு எச்சரித்துவந்த ஒருவர் கடைசியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

ராஜசிங்கம் என்ற இதரது மரணம் சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு வெஸ்லி டி தாமோதரம் மரணவிசாரணை நடத்தினர். மரணவிசாரணையில் காலஞ்சென்றவரின் மனைவி சின்னச்சி சாட்சியமளிக்கையிற் கூறியதாவது: நான் காலஞ்சென்றவரை 22 வருடங்களுக்கு முன்னர் விவாகஞ் செய்திருந்தேன். எமக்கு 4 பிள்ளைகள் உண்டு. கணவர் கூலி வேலை செய்பவர். குடிப்பழக்க முள்ளவர். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நிறையக் குடித்து விட்டு வீட்டுக்கு வந்தார். சாதாரணமாக நடந்து கொள்வதை விட அன்று மோசமாகநடந்து கொண்டார். மாலை 6 மணி யளவில் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் கூறிக் கொண்டு கிணற்றடிக்கு ஓடினர். நான் உடன் சென்று அழைத்து வந்தேன். விருந்தையில் இருத்திச் சாப்பிட வருமாறு அழைத்தேன். அவர் விருந்தையில் படுத்திருந்தார். நானும் எனது பிள்ளைகளும் வீட்டினுள் படுத்திருந்தோம். அதிகாலை 5 மணியளவில் கிணற்றடியிலுள்ள மரத்தில் யாரோ தொங்குவதாகச் சத்தம் கேட்டு ஸ்தலத்துக்கு ஓடினேன். எனது கணவர்தான்,தான்வைத்திருந்த சால்வையைக்கொண்டு கழுத்தில் சுருக்கிட்டுதொங்கிக் கொண்டிருந்தார். அவர்குடித்துவிட்டுத் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் பல முறை கூறி வந்திருக்கிறர். எனது கணவருக்கு கடன் இருந்தது.

காலஞ் சென்றவரின் மைத்துனர் பொன்னர் கிட்டினர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவர் மரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு நான் தான் சத்தமிட்டேன். பின் மரத்திலிருந்து அவரை இறக்கினேன்.

நீதிபதி காங்கேசன் துறை மாவட்ட வைத்திய அதிகாரியைப் பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டு மேல்விசாரணையை இம் மாதம் 24ம் திகதி வரை ஒத்திவைத்தார். காங்கேசன் துறைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. தாமோதரம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

# கி. வா. ஜ., முருகவேள் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

'சித்தாந்தம்' ஆசிரியர் திரு. வா. முருகவேளும் 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகநாதனும் கொழும்பு விவேகானந்தசபை நடாத்தும் திருமுறை விழாவில் கலந்து கொள்வதற்காக விமானத்தில் வியாழக்கிழமை பிற்பகல் இங்கு வந்து சேர்ந்தனர். கொழும்புக்குச் செல்லும் வழியில் பலாலி விமானநிலையத்தில் சில நிமிட நேரம் தங்கியிருந்த இவர்களைப் பலர் சென்று வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்தனர்.

இவர்களுடன் திருப்பெருந்திருகுன்றக்குடி அடிகளாரும் வருகிறரென்று நூற்றுக்கணக்காக விமான நிலையத்திற்கு வந்திருந்த அறநெறிக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் ஏனையோரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இங்கு விஜயஞ் செய்திருக்கும் இந்திய தமிழ் அறிஞர்கள் அடுத்த மாதம் 3-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல விடங்களுலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்களெனவும் யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு வார காலம் தங்கியிருந்து வட்டுக்கோட்டை நீர்வேலி ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவார்களெனவும் தெரிகிறது.

குன்றக்குடி அடிகளார் இங்கு வருகை தந்தாலும் கூடிய சீக்கிரம் தாயகம் திரும்புவாரெனத் தெரிகிறது. தென்னிந்தியாவில் கோலாகலமாக நடைபெறவிருக்கும் திருமுறை விழாவில் அவர் முக்கியமாகக் கலந்து கொள்ள விருப்பதே இதற்குக் காணரமாகும்.

## சனசமூக நிலையம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியாழன்

இணுவில்- சண்டிலிப்பாய் சனசமூக நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நடப்புவருட நிர்வாகிகளாக கீழ் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்:-இராசவாசல் முதலியார் சி. தியாகராசா தலைவர்:- கே. திருநாவுக்கரசு. உப தலைவர்:- எஸ். காசிநாதன். காரிய தரிசி:- ஆ. ரவீந்திரன். உப காரியதரிசி:- ஏ. ஆனந்த முருகன். தனதிகாரி:- எஸ். சிவபாலன்.

## உணவுப் பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்தன

வெலிகம, வியாழன்

உணவுக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் தலைமையில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பல பதுக்கி வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக, அரிசி, கருவாடு, உப்பு ஆகிய பொருள்கள் பெருந்தொகையில், தனிப்பட்ட சொந்த முறையில் மறைத்துவைத்திருக்கக் காணப்பட்டன. இப்பொருள்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு மாத்தறை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டன.

# ரூ. 5 கோடி செலவில் சிறு கைத்தொழில்சேவா ஸ்தாபனம்

கொழும்பு, வெள்ளி

சிறு கைத்தொழில் சேவா ஸ்தாபனம் ஒன்றை 5 கோடி ரூபாய் செலவில் மொரட்டுவை வெலோனவில் ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இவ்வாண்டின் இறுதியில் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படும்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறு கைத்தொழில்களுக்கும் புதிய கைத்தொழில் திட்டங்களுக்கும் இந்த ஸ்தாபனம் தொழில் நுட்ப சேவை வழங்கும். இந்த ஸ்தாபனத்தின் பெயரில் அமெரிக்கா 2 கோடி ரூபாய் வழங்கும் எனத் தெரிகிறது. இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், தொழில் நுட்ப சேவைகளை வழங்கி அமெரிக்கா இந்த உதவியைச் செய்கிறது.

ஆராய்ச்சி வேலைகளிலும். பொருள்களுக்கு விற்பனவுச்சந்தைகள் தேடுவதிலும் இந்த ஸ்தாபனம் சிறு கைத்தொழில்களுக்கு உதவும் எனக் கைத்தொழில், உள் நாட்டு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவிக்கின்றர். ஏனைய அபிவிருத்தி நாடுகளில் இப்பேற்பட்ட ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு அவை கைத்தொழில் அபிவிருத்திக்குப் பெரும் உதவி செய்துவருவதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

## சங்காகரர் சேவா சங்கம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் சங்காகரர் சேவா சங்க ஆரம்பக் கூட்டம் ஆசிரியர் திரு. பொ. இராசையா, தலைமையில் நடைபெற்றது.

புது வருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. பரமசாமி, உபதலைவர்கள்: திருவாளர்கள் பொ. இராசையா, க. இராசரத்தினம், இணைச்செயலாளர்: திருவாளர்கள் கி. சிவமணி, கி. சுப்பையா, பொருளாளர்: திரு. க. கந்தசாமி, நிருவாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் கா. கணேசதாசன், மு சகாதேவன், ஆ. இரத்தினம்,ந. ஐயம்பிள்ளை, க. செல்வராசா, கணக்குப்பரிசோதகர்கள்: திருவாளர்கள் மு. க. முருகையா, மு. சித்திரசேனன்.

## க்ஷயரோக தினம்

### போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலி. மேற்கு கிளை இவ்வாண்டு க்ஷயரோக தினத்தை முன்னிட்டு க்ஷயரோகம் சம்பந்தமான போட்டிகளை நடத்த முடிவுசெய்துள்ளது.

இப்போட்டிகளில் க்ஷயரோகம் சம்பந்தமான சம்பாஷணை, குழுப்பாட்டு, சித்திரப்போட்டி, அறிவுமொழி எழுதல். முத்திரை விற்பனை ஆகியன இடம் பெறுகின்றன. இவற்றில் வெற்றியீட்டுபவர்களுக்கு 'சனஞ்' வெள்ளிக் கிண்ணங்களும், பதக்கங்களும், வேறு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

## "காலஞ்சென்ற பிரதமர் கொள்கைகள் என்றுமே நிலைக்கும்"

குருநாகல், வெள்ளி

"காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். ஆனல் அவருடைய கொள்கைகள் என்றுமே எம்முடன் நிலைக்கும்."

இவ்வாறு பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜயசேன ஹலமிலவெவாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:

காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைகள் சாதாரண மனிதரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலேயே வரையறுக்கப்பட்டவை. முன்னைய அரசாங்கங்களுக்குக் கீழ் அடிமையாக வாழ்ந்த எளிய மக்களுக்காகவே அவரது கொள்கைகள் உருவாக்கப்பட்டவை. இந்தப் பெரும் தலைவரின் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலிருந்து சிறிமாவோ அரசாங்கம்சிறிதும் தவறுது.

# அரிசி, மாவு இறக்குமதியில் வீழ்ச்சி; ரூ. 4½-கோடி மிச்சம்

கொழும்பு, வெள்ளி

அரிசி இறக்குமதியில் சென்ற வருடத்தில் நான்கு கோடி அறுபதுலட்சம் ரூபாய் இலங்கை அரசாங்கத்துக்கு மிச்சம் ஏற்பட்டது. அரிசி இறக்குமதியில் சென்ற வருடத்தில் ஒரு லட்சம் தொன் அரிசி குறைக்கப்பட்டது. இதன் விளைவாக 4 கோடி 60 லட்சம் ரூபாய் அன்னிய செலவாணியில் மிச்சப் படுத்தப்பட்டது.

1959-60-ம் வருடத்தில் 5,85,510 தொன் அரிசி, 25,61,62,459 ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்பட்டது. 1960-61-ம் வருடத்தில் 4,5,6 205 தொன் அரிசிதான் இறக்குமதி செய்யப்பட்டது என்று காணி விவசாய அமைச்சு தயாரித்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடத்தில் மாவு இறக்குமதியும் குறைக்கப்பட்டதாகவும் இதன் மூலம் ஒரு கோடி ரூபாய் அன்னிய செலவாணியில் மிச்சம் கிடைத்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

சென்ற வருடத்தில் ஜனத்தொகையில் 2 லட்சத்து 70,000 பேர் அதிகரித்தபோதிலும் அதற்கு முன்னைய வருடத்தைவிட மொத்தம் ஐந்து கோடி 60 லட்சம் ரூபாய் அன்னிய செலாவணியில் மிச்சம் கண்டதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

உள்நாட்டில் சென்ற வருடம் ஒருலட்சம் தொன் அரிசி உற்பத்தி அதிகரித்ததாகவும் தேயிலை, தேங்காய் உற்பத்தியும் அதிகரித்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

1957-ம் ஆண்டில் ஒரு ஏக்கர் நிலத்தில் சராசரி 31 புசலாகவிருந்த நெல் விளைச்சல் 1961-ம் ஆண்டில் 37 புசலாக அதிகரித்தது என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

## கருவாடு புதைக்கப்பட்டது

அக்குரஸ்ஸ, வியாழன்

அக்குரஸ்ஸ கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் கிடந்த சுமார் 58 அந்தர் கருவாடு பழுதடைந்த நிலையிலுள்ளது என அக்குரஸ்ஸ வைத்திய அதிகாரி திரு. ஏ. பொலன்னவித்தா தெரிவித்ததன் பேரில் அவ்வளவு கருவாடும் புதைக்கப்பட்டது. கருவாடு முழுவதும் புதைக்கப்பட்டதா என்பதை திரு. ஜி. கே. எம். தர்மதாசா மேற்பார்வையிட்டார்.

## வானெலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 21-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 எஸ். குலசேகரம் - பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-45 ஈஸ்டர் விசேஷ நிகழ்ச்சி, 8-00 வாத்தியக் கோஷ்டி, 9-30 பாட்டு, 10-15 கோஷ்டிகானம்.

ஞாயிறு 22-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 8-00 தேர்ந்தஇசை, 8-15 தமிழ்மூலம், சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-30 கோட்டுவாத்தியம்.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-15 ஈஸ்டர் நிகழ்ச்சி, 7-30 ருக்மணி சர்மா-பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 ஷேக்ஸ்பியர் தின நிகழ்ச்சி, 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

சனி 21-4-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 திருக்கோடிக்கால் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 திருக்கோடிக்காவல் ஆர். கிருஷ்ணமூர்த்திஐயர் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 திருநீலகண்டர் ஹரிகதா, 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 22-4-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சிதம்பரம் வி. என். ராஜநாயகதீட்சதர் - பாட்டு, 8-15 என்.ரமணி - புல்லாங்குழல்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கே. ஜே. ஜேஸ்-தில்ருபா.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கதாகாலட்சேபம் - உரைக்கோவை, 8-00 மன்னார்குடி எஸ். பரமசிவம் - நாகஸ்வரம், 9-15 அருணகிரிநாதர் விழா அஞ்சல்.

## சிந்தாமணி விநாயகராலய உற்சவம்

நாவலி, வியாழன்

நவாலியூர் சிந்தாமணி விநாயகராலய மஹோற்சவம் வரும் 25-ம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 4-ம் திகதி வரை நடைபெறும். 3-ம் திகதி இரதோற்சவமும் 4-ம் திகதி காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## சுடலையை இடமாற்ற கோரிக்கை

வேலணை, வியாழன்

வேலணை வடக்கில் உள்ள சோளாவத்தைச் சுடலையை தற்போது உள்ள இடத்தில் இருந்து அகற்றி வடக்கே கடற்கரைக்கு அண்மையில் மாற்றியமைக்குமாறு வேலணை வடக்கு பாரதி இளைஞர் கழகம், வேலணை கிராமசபையைக் கேட்டுள்ளது.

குடியிருப்புகளுக்கு மிகவும் அண்மையில் இருக்கும் அச்சுடலையால் மக்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகளையும் மற்றும் வசதியீனங்களையும் கழகம் தனது வேண்டுகோளில் எடுத்துக்காட்டி உள்ளது. விரைவில் சுடலையை இடமாற்றம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதாக வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. கந்தசாமி பதிலளித்துள்ளார்.

## ஜ. தொ. கா. விஸ்தரிப்பு

கொழும்பு, வெள்ளி

ஜநாயக தொழிலாளர் காங்கிரஸுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் கடந்த மாதம் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தோட்டப் பகுதிகளில் 20 பிரதேச காரியாலயங்களைப் புதிதாகத் திறந்துள்ளது.

இம்மாத இறுதிக்கிடையில் மேலும் 10 அலுவலகங்கள் திறக்கப்படும் என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. ஏ. அஸீஸ கூறியுள்ளார்.

## பஸ் விபத்தில் பரிதாப மரணம்

தெனியாய, வெள்ளி

தெனியாயாவிலிருந்து பள்ளேகம சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று பாதை தவறி தொலமெட கொடாவிலுள்ள தேயிலைத் தோட்டமொன்றில் பக்கவாட்டாக விழுந்துவிட்டது.

பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த மராப்புலிகே பேபி (வயது 40) என்னும் பெண் பக்கவாட்டாக விழுந்த பஸ்ஸின் கீழ்ப்புறமாக அகப்பட்டு நசுங்கி மரணமானார்.

மரணமானவர், ஆபத்தான நிலையில் தெனியாய ஆஸ்பத்திரியில் இருந்த தம் தாயாரைப் பார்வையிட்ட பின்னர் தமது வீட்டுக்கு பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தார். சுமார் 15 மணித்தியாலங்கள் வரை, பஸ்ஸின் கீழிருந்து அவரது சடலத்தை எடுப்பதற்கு முடியவில்லை.

## கிளைத் தலைவர் படத்திரை நீக்கம்

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு அர்ச் பிரான்சிஸ் சவேரியார் சனசமூக நிலைய கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ம. டேவிட் அனுதாபக் கூட்டம் செனட்டர் ஜி. நல்லையா தலைமையில் இந்தச் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. டேவிட்டின் படத்தை திரு. நல்லையா திரை நீக்கஞ் செய்து அவரது சேவையைப் பாராட்டிப் பேசினார்.

திரு. ச. சு. மனுவேற்பிள்ளையும் இன்னும் பலரும் பேசினர்கள்.




# புகைப்பட கருவிகளுக்கு இறக்குமதி தடை

## புனராலோசனை செய்யுமாறு கோரப்படும்

கொழும்பு, வெள்ளி
புகைப்படக் கருவிகளுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடைகளைப் புனராலோசனை செய்யும்படி நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் ஒரு மகஜரைத் தயாரிப்பதற்காக புகைப்படக்காரர்களும், கலாச்சாரம், கல்வி ஆகிய துறைகளில் அக்கறை உள்ளவர்களும் ஒன்றுகூடி முடிவுசெய்வார்கள் எனத் தெரியவருகிறது.

புகைப்படத் தொழில் ஒரு கலைமட்டுமன்றி கல்வி, கலாச்சாரத்துக்கும் அது உதவியளிக்கக்கூடியது என்று இக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

இலங்கைபற்றிய இயற்கைக் காட்சிகளைச் சித்தரித்துக் காட்டும் தபாலட்டைகளை, வெளியூர்களிலிருந்து இலங்கை வரும் உல்லாசப் பிரயாணிகள் ஏராளமாக விரும்பி வாங்கினார்கள். அதுமட்டுமன்று பேனா நண்பர்களும் இதில் பெரிதும் அக்கறை காட்டினார்கள். ஆனால், புகைப்படக் கருவிகளுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடைகளினால், அது பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது.

இந்த இறக்குமதித் தடைகளினால் உள்நாட்டிலுள்ள ஸ்டுடியோக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.



நல்லூர் கிராம சபையின் 9-ம் வட்டார இடைத் தேர்தலில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு. சிவக்கொழுந்து கனகரத்தினம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)
கெப்பிட்டல் (கொழும்பு) — சபையர் (வெள்ளவத்தை) — விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) — வெர்பினி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை) — மோடர்ன் (பதுளை) — லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) — தீவொளி (நுவரெலியா) — ஜெமினி (ராகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி...
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

## பாகிஸ்தானில் 26 பேர் கைது

ஷில்லாங், ஏப்ரல் 20
பிரயாணதஸ்தாவேஜுகளின்றி நாட்டில் பிரவேசித்ததாக கரிய கஞ்ச்பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் 26 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டனர். 36 பாகிஸ்தானியர்கள் பாக்கிஸ்தானுக்குத் திரும்பிச்செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர்.

## 580 லட்சம் டாலர் கடன்

புதுடில்லி, ஏப். 20
மேற்கு வங்கத்திலும், பீகாரிலும் இரு அபிவிருத்தித் திட்டங்களுக்கு, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்கஸ்தாபனம் 580லட்சம் டாலர் கடன் வழங்கியுள்ளது.

## இந்தோனேஷியா படைபலத்தை அதிகரிக்கிறது

ஜாகர்த்தா, ஏப்ரல் 20
இந்தோனேஷியா தன் படைபலத்தை வெகுவாக அதிகரித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஹிந்திப்படம் தெரிவு

புதுடில்லி, ஏப்ரல் 20
"காபுலிவாலா" என்ற ஹிந்திப்படம் ஜுலை மாதம் சுவிட்ஸர்லாந்தில் நடைபெறவிருக்கும் சினிமா விழாவில் காட்ட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இப்படத்தைத் தயாரித்தவர் பிமல்ராய் ஆகும்.

## அர்ஜண்டீனவில் மீண்டும் நெருக்கடி

புவனஸ்அயர்ஸ், ஏப், 20
அர்ஜண்டீனவில்கம்யூனிஸ்ட், கம்யூனிஸ்ட் சார்பு ஸ்தாபனங்களைச் சேர்ந்த 150 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. அங்கு மற்றொரு அரசியல் நெருக்கடி தோன்றியிருப்பதாயும், முக்கிய இடங்களில் துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

## அடுலா - ஷோம்பே மீண்டும் சந்திப்பு

லியப்போல்ட்வில்லி, ஏப். 20
கடாங்கா அதிபர் ஷோம்பேயும், காங்கோ பிரதமர் அடுலாவும் நாளை மீண்டும் சந்தித்துப் பேசுவார்கள் என ஒரு செய்தி கூறுகிறது.

## வீதியில் இறந்துகிடந்தார்

யக்கலை, வெள்ளி
வீதியோரமாக இறந்துகிடந்த பிலியந்தல என்ற இடத்தைச் சேர்ந்த ஏ. றணதுங்காவின் மரணம் குறித்து கட்டுவாகெடையைச் சேர்ந்த எம். பி. மகிலிஸ் என்பவரை ரிமாண்டில் வைக்கும்படி கம்பஹா மாஜிஸ்திரேட் திரு எஸ். டி. ஜயசுந்தரா உத்தரவிட்டுள்ளார்.

## கொலை முயற்சி வழக்கு

களுத்துறை, வெள்ளி
1960-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் திகதி, மொறட்டுமுல்லையைச் சேர்ந்த கே.என். விக்டர் என்பவரைக் கொலைசெய்ய எத்தனித்ததாக பி. அபயக்கூன், பி. எக்மன் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், களுத்துறை அஸெஸ்கமிஷனர் திரு. ஏர்வி விஜயவர்த்தன முதல் எதிரி அபயக்கூனுக்கு 18 மாதக் கடுழியச்சிறைத் தண்டனை விதித்தார். இரண்டாவது எதிரி ரூ 200 பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்

## தீ வைத்தவருக்கு ஒரு வருடச் சிறை

யக்கலை, வெள்ளி
'இப்படியான குற்றங்களுக்கு கருணைகாட்டக்கூடாது. சொந்தக்காரர் இல்லாத சமயம், நீர் கடைக்குத் தீமூட்டியிருக்கிறீர். அந்தக்கடைக்குள் அச்சமயம் இரு சிறுவர்கள் நித்திரை செய்துகொண்டிருந்தனர்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 30-ம் திகதி பிட்டியாகெதரவைச் சேர்ந்த ஏ. கே. ஓ. ஆர்தர் என்பவருக்குச் சொந்தமான கடைக்குத் தீமூட்டியதாக, பெம்முல்லையைச் சேர்ந்த எம். ஏ. பியதாச என்பவர்மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவில் கம்பகா மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறு கூறினார்.

விசாரணை முடிவில், பியதாஸாவுக்கு மாஜிஸ்திரேட் ஒரு வருடகடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## நாளொன்றுக்கு 5 லட்சம் டாலர்

சிட்னி, ஏப், 20
பசிபிக்கடலில் கிறிஸ்துமஸ தீவுகளையும் ஜான்ஸன் தீவுகளையும் சுற்றிலும் வாயுமண்டலத்தில் அணு ஆயுத சோதனைகளை யு. எஸ். நடத்தப்போகிறதல்லவா? அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகத் தற்பொழுது யு. எஸ். நாளொன்றுக்கு 5 லட்சம் டாலர் செலவிட்டு வருகிறது. இந்தச் செலவு விரைவில் இரட்டிப்பாக்கப்படுமாம்.

## குடியேற்றத்தடை சட்டத்துக்கு எதிர்ப்பு

லண்டன், ஏப்ரல் 20
சாம்ராஜ்ய குடியேற்றத் தடைச்சட்டத்தை பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தினர்கள் எதிர்த்திருக்கின்றனர். இது தீங்கு விளைவிக்கும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

லண்டனிலுள்ள இந்திய காலனி ஒன்றில் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் வசிப்பதாயும், ஏராளமான இந்தியக்குழந்தைகளுக்கு பாடசாலைகளில் இடமில்லை என்றும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## அணுத்தடையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஏப்ரல் 20
உத்தேச அமெரிக்க அணு சோதனையை எதிர்த்து இங்குள்ள அமெரிக்க ஸ்தானிகராலயத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டென்மார்க்கிலும் மூன்றுவதுதடவையாகப் பெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

## நகரசபையின் வார்டுகள் அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்
ஹொரணை நகரசபை, கொலன்னாவை நகரசபை ஆகியவற்றின் தொகுதி வார்ட்டுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஹொரணை நகரசபையில் முன்னர் ஐந்துவார்டுகள் தானிருந்தன. இப்பொழுது ஐந்திலிருந்து ஏழாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுபோல் கொலன்னாவை நகரசபையின் வார்ட்டுகள், ஏழிலிருந்து பதினொன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

## கார் களவாடப்பட்டது

காலி, வெள்ளி
3 ஸ்ரீ இலக்கத் தொடர்புடைய மொரிஸ்மைனர் கார் ஒன்று களவாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. கார்ச் சொந்தக்காரர் தமது காரை, காலியிலுள்ள ஒரு ஹோட்டலுக்கருகில் நிறுத்திவைத்தாரென்றும், காரியாலயத்துக்குச் சென்று திரும்பிய சமயம், அங்கு கார் காணப்படவில்லையென்றும் கூறினார். இதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன.

## கலைஞர் களவாடினார்?

தெஹிவளை, வெள்ளி
கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். எல். பி. அபயசேகரா முன்னிலையில், எஸ். எக்கநாயக்கா சாட்சியமளிக்கையில், தாம் ஒரு சித்திரக்காரர் என்றும், சொந்தமாக இருப்பிடம் எதுவும் இல்லையென்றும் கூறினார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு. சி. ஜயதிலக்கா என்பவருக்குச் சொந்தமான வீட்டை உடைத்து களவாடியதாக, சித்திரக்காரர் எக்கநாயக்காமீது குற்றம் சாட்டி இவ்வழக்குப் பதிவாகியிருந்தது.

மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## பஸ்ஸுக்கு காத்திருந்தவர் மயக்கமானார்

கொழும்பு, வெள்ளி
கொகுவெல பஸ் ஒன்றுக்காக புறக்கோட்டை பஸ் நிலையத்தில் (இரண்டு மணிநேரம்) காத்து நின்றவர்களில், இருவர் மயக்கமானார்களென அறிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லுதற்கு பல மணிநேரம் காத்து நிற்கவேண்டுமென்றும், தினசரி கொகுவெலவுக்குச் செல்லும் பிரயாணிகள் சிலர், இது குறித்து மந்திரிக்கு முறையிட ஆயத்தம் செய்துள்ளார்கள் என்றும், நீண்டநேரம் கொதிக்கும் வெயிலில் காத்துநின்று பொறுமையிழந்த பிரயாணி ஒருவர் கூறினார்.

கூப்பன் இல: 9

**வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962**

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ______________

கல்லூரி ______________

எனது பெயர் ______________

விலாசம் ______________

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது